# කාර්ය සාධන වාර්තාව හා ගිණුම්
# செயலணி அறிக்கையும் கணக்குகளும்
# Performance Report and Accounts

# 2018



දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - කුරුණෑගල

மாவட்டசெயலகம் - குருணாகல்

District Secretariat - Kurunegala

## பொருளடக்கம்


| இலக்கம் | அத்தியாயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | அறிமுகம் | 1 |
| 1.1 | மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபரின் செய்தி | 1 |
| 1.2 | நோக்கு | 2 |
| 1.3 | செயற்பணி | 2 |
| 1.4 | மாவட்ட செயலகத்தின் நோக்கம் | 2 |
| 1.5 | மாவட்ட செயலகத்தின் பணிகள் | 2 |
| 1.6 | மாவட்ட செயலகத்தின் தரக் கொள்கை | 2 |
| 1.7 | கட்டுப்படுத்தப்பட்ட நிறுவனம் | 3 |
| 1.8 | மாவட்டத்தின் தகவல்கள் | 4 |
| 1.9 | பிரதேச செயலாளர் அலுவலகம் | 4 |
| 1.10 | மாவட்டத் திட்டம் | 5 |
| 1.11 | பணிக்குழுவின் அமைப்பு | 6 |
| **2** | **மாவட்ட செயலகத்தின் பலதரப்பட்ட பிரிவுகளின் சேவை** | **7** |
| 2.1 | தாபன பிரிவு | 7 |
| 2.2 | மாவட்ட திட்டமிடல் பிரிவு | 7 |
| 2.3 | வெடிமருந்து பிரிவு | 8 |
| 2.4 | செய்திப் பிரிவு | 9 |
| 2.5 | மாவட்ட சமுர்த்தி பிரிவு | 9 |
| 2.6 | சமூக பாதுகாப்பு பிரிவு | 12 |
| 2.7 | அளவீட்டு அலகுகள் தரப் பிரிவு | 13 |
| 2.8 | புள்ளி விபரவியல் பிரிவு | 13 |
| 2.9 | தேசிய உரம் செயலகம் | 15 |
| 2.10 | அரச சார்பற்ற அமைப்பு பிரிவு | 15 |
| 2.11 | கலாச்சார பிரிவு | 16 |
| 2.12 | பௌத்த நடவடிக்கை பிரிவு | 17 |
| 2.13 | சமூக சேவை பிரிவு | 18 |
| 2.14 | அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவு | 19 |
| 2.15 | இலங்கை தொழில்நுட்ப அபிவிருத்தி சபை | 19 |
| 2.16 | மோட்டார் போக்குவரத்து பிரிவு | 19 |
| 2.17 | அனர்த்த நிவாரண சேவை பிரிவு | 20 |
| 2.18 | உள்ளக கணக்காய்வு பிரிவு | 20 |
| 2.19 | பொறியியல் பிரிவு | 22 |
| 2.20 | வேலைவாய்ப்புக்கள் சேவை மத்திய நிலையம் | 26 |
| 2.21 | விவசாயப் பிரிவு | 26 |
| 2.22 | மாவட்ட காணி பயன்பாட்டு பிரிவு | 28 |
| 2.23 | சிறுவர் பாதுகாப்பு பிரிவு | 28 |
| 2.24 | மகளிர் மேம்பாட்டு பிரிவு | 29 |
| 2.25 | காணிப் பிரிவு | 29 |
| 2.26 | ஆரம்ப பிள்ளை பருவ பாதுகாப்பு மேம்பாட்டு பிரிவு | 30 |
| 2.27 | சிறுவர் பரிமைகள் பிரிவு | 30 |
| 2.28 | விசாரணை பிரிவு | 31 |
| 2.29 | ஆலோசனை பிரிவு | 31 |
| 2.30 | விளையாட்டு பிரிவு | 32 |
| 2.31 | நுகர்வோர் நடவடிக்கை பிரிவு | 32 |
| 2.32 | உற்பத்தி திறன் பிரிவு | 32 |
| 2.33 | கணக்கு பிரிவு | 33 |
| | ஆண்டு மதிப்பீட்டு ஒதுக்கீடு ஒதுக்குதல் | 33 |
| | ஒதுக்கீடுகளுக்கு எதிரான செலவு | 33 |
| | அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு 27201 | 34 |
| | பொது வைப்பு | 35 |
| | வருமான கணக்கு | 35 |
| | திறைச்சேரி முன்பணக் கணக்கு | 36 |
| | வரி அமைச்சு மற்றும் திணைக்கள ஒதுக்கீடு | 36 |
| | உப அட்டவணை 02 | 37 |
| | உப அட்டவணை 03 | 39 |
| | ஆண்டு ஒதுக்கீட்டு கணக்கின் தகவல்கள் | 42 |
| | ஏ.சீ.ஏ - 2 | 42 |
| | ஏ.சீ.ஏ - 2 (i) | 43 |
| | ஏ.சீ.ஏ - 2 (iv) | 49 |
| | ஏ.சீ.ஏ - 2 (v) | 50 |
| **3** | **முடிவு** | **51** |
| | கணக்காய்வாளர் நாயகத்தின் கருத்து | 53 |

# அரசாங்க அதிபரின் செய்தி



குருணாகல் மாவட்ட செயலகத்தின் 2018 ஆண்டிற்கான செயல் திறன் மற்றும் கணக்கு அறிக்கையினை இவ்வாறு சமர்பிக்கின்றேன். 30 பிரதேச செயலகங்களை உள்ளடக்கிய பாரிய நிருவாக மாவட்டமாகிய குருணாகல் மாவட்டமாகும். இதில் பலதரப்பட்ட அமைச்சுக்கள் திணைக்களங்களுடன் கைகோர்த்து செயற்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் 2018 ஆம் ஆண்டு செயல்திறன் மற்றும் கணக்கு அறிக்கையினையும் உங்கள் கரங்களுக்கு கையளிப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

அரசினால் செயற்படுத்தப்படுகின்ற நல்லாட்சியினை யதார்த்தமாக்குவதற்காக 2017 ஆண்டிற்காக திறைச் சேரியினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட மற்றும் முன்பணம் மாவட்டத்தில் பிரதேச செயலாளர் அலுவலகங்கள் மற்றும் மாவட்ட செயலாளர் அலுவலகம் மூலம் உற்பத்தி திறனுடன் பயன்படுத்திய முறையினை இத்துடன் தெளிவாகின்றது. இதற்காக மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் மற்றும் பிரதேச செயலகங்களுடன் ஏனைய சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் அர்ப்பணிப்புடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது பற்றி நினைவு கூறுகின்றேன்.

. கிராமத்தை கட்டி எழுப்பும் திட்டம், கிராம விளையாட்டு மைதான மேம்பாட்டு திட்டம், கிராம சுயசக்தி பொது மக்கள் திட்டம், உட்கட்டமைப்பு வசதி மேம்படுத்தும் விசேட திட்டம், பரவலாக்கப்பட்ட வரவுசெலவு திட்டம், அபிவிருத்தி செய்யப்படாத விஹாரைகளை மேம்படுத்தும் திட்டம், ‘‘சுகித புரவர’’ சிறு நகரங்களை மேம்படுத்தும் திட்டம் மிகவும் வெற்றிகரமாக செயற்படுத்தி எமது பணியினை நன்கு நிறைவேற்றப்பட்ட முறை மற்றும் ஏனைய திணைக்களங்கள் மற்றும் அமைச்சின் கிழ் நடைமுறைப்படத்தப்பட்ட திட்டங்கள் பற்றியும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

இத் திட்டங்களுக்கு மேலதிகமாக ஜனாதிபதி செயலகத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட போதைப் பொருள் தடுப்பு, சிறுநீரக நோய்த் தடுப்பு, உணவு ஊட்டச்சத்து, தேசிய டெங்கு தடுப்பு, சுற்றாடல் பாதுகாப்பு ஆகிய திட்டங்களை மிகவும் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டில் மூலதன மற்றும் மீள்வரும் மொத்த செலவு 8591 மில்லியன் ரூபா இடையில் அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்றத்தினால் 100% இலபம் பெற்றுக் கொள்வதற்கு இயலுமாயனது.5

இந்த மாவட்ட மக்களை திருப்தியடையச் செய்து பேண்தகு அபிவிருத்தியினை மேற்கொள்ளும் நோக்கில் நாங்கள் செல்லும் பாதையில் கைகோர்த்து எங்களுக்கு ஒத்தாசை வழங்கிய அரச நிருவாக மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சின் செயலாளருக்கும், உள்ளகமும் உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபையும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கும் மற்றும் சகல நிறுவனங்களினதும் உத்தியோகத்தர்களுக்கும், அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும், மாவட்ட செயலகத்தின் எனது பணிக் குழுவினருக்கும் இதயம் கனிந்த நன்றியினை வழங்குகின்றேன்.

காமிணி இலங்கரத்ன
குருணாகல் அரசாங்க அதிபர் / மாவட்ட செயலாளர்
உள்ளக மற்றும் உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபையும்
உள்ளூராட்சி அமைச்சின் மேலதிக செயலாளர்.

திறைச்சேரி செயலாளரின் இலக்கம் பி.எஸ்/எப்.எஸ்/03 (xiv) மற்றும் 2002 செப்தம்பர் மாதம் 12 ஆந் திகதி அரச நிதி சுற்று நிருபம் 402 படி குருணாகல் மாவட்ட செயலகத்தில் 2018 திசம்பர் மாதம் 31 ஆந் திகதி முடிவடைந்த நிதி ஆண்டிற்கான செயற்பணி அறிக்கையும் கணக்கு அறிக்கை கீழ் உள்ளவாறு சமர்பிக்கின்றேன்.

**மாவட்ட செயலகம் - குருணாகல்**

**1.2 நோக்கு**

பொதுமக்களுக்கு திருப்திகரமான சிறப்பான அரச சேவை

**1.3 பணி**

அரச கொள்கைக்கு அமைய திட்டமிட்டு வளங்களையும் நிறுவனங்களையும் பயனுள்ளதான முகாமைத்துவம் செய்து பொது மக்கள் திருப்தியடையும் வகையில் பேண்தகு அபிவிருத்தியினை ஏற்படுத்தல்

மாவட்ட மாக்கள் தேசிய அபிவிருத்தியிற்கு பங்களிப்பு செய்யும் வகையில், பரவலான அபிவிருத்தியிற்காக அரச கொள்கைகளுக்கு அமைய நல்ல திட்டத்துடன், வளங்களையும் நிறுவனங்களையும் உற்பத்தி திறனுடன் கொண்டு நடாத்துகின்ற ஒருங்கிணைப்பினால் மக்களின் தேவைகளை திறம்பட சாதாரணமாகவும் நன்னெறியாகவும் நட்புடன் நிறைவேற்றுதல் குருணாகல் மாவட்ட செயலாளர் அலுவலகத்தின் பணியாகும்.

**1.4 மாவட்ட செயலாளர் அலுவலகத்தின் நோக்கம் -**

- அரச முகவர் நிறுவனம் என்ற வகையில் பல்வேறுபட்ட சட்ட திட்டங்களினால் வழங்கப்பட்டுள்ள சேவைகளை ஆற்றுவதலினால் மக்களின் தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றல்.
- மாவட்டத்தில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக மனித நிதி மற்றும் பௌதீக வளங்களை முறையாக கொண்டு நடாத்தல்

**1.5 மாவட்ட செயலாளர் அலுவலகத்தின் அலுவல்கள் -**

- அரசின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களும் நிகழ்ச்சித் திட்டம் அரசின் நியதிகளுக்கு அமைய நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான கொண்டு நடாத்தலும் வழி நடாத்தலும்.
- பிரதேச செயலகங்களின் நடவடிக்கைகளை கொண்டு நடாத்தலும் வழிநடாத்தலும்
- சட்டபூர்வ கட்டளைகளினால் விதிக்கப்பட்ட அதிகாரம் பொறுப்புக்களை நிறைவேற்றல்
- வேறு எல்லைக்குட்பட்ட அமைச்சும் திணைக்களங்களில் மாவட்ட முகவராக செயற்படுதல்
- மாவட்டத்தினுள் சட்டத்தையும் சமாதானத்தையும் பேணுவதற்காகவும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக பாதுகாப்பு பிரிவுடன் நல்லுறவினை பேணுதல்
- அரச வருமானத்தை கணக்கு கொடுக்கும் உத்தியோகத்தருக்காக முகவராக அரச வருமானத்தை ஒன்று சேர்த்தலும் கணக்குப் பார்க்கும் மத்திய நிலையமாக செயற்படுதல்.

**1.6 மாவட்ட செயலாளர் அலுவலகத்தின் நிலையான கொள்கை**

அரச கொள்கைகளுக்கு அமைய மனித. பௌதீக. நிதி வளங்களை பயனுள்ளதாகவும் வினைத் திறனுடனும் உபயோகித்து எங்களது குடியுரிமைச் சட்டத்திற்கமைய ஒவ்வொருவரினது நிலை பற்றிய தகுந்த புரிந்துணர்வுடன் செயற்பட்டு மாவட்டத்தின் குடியாளர்களுக்கு திருப்திகரமானதும் திரனான குணநலமுடைய சேவையை எப்போதும் மேம்படுத்தி தொடர்ந்து பெற்றுக் கொடுத்தல் எங்களது நிலையான கொள்கையாகும்.

**1.7 கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனம்**

குருணாகல் மாவட்ட செயலாளரின் வழிநடாத்தல், மேற்பார்வை மற்றும் கொண்டு நடாத்தலின் கீழ் மாவட்ட செயலாளர் அலுவலகத்தினுள் கீழ் காணப்படும் நிறுவனமும் பிரிவும் நடைமுறைப்படுத்தப்படும்.

- கணக்குப் பிரிவு
- நிருவாக பிரிவு
- சமுர்த்தி பிரிவு
- சமூக பாதுகாப்பு ஓய்வூதியப் பிரிவு
- மாவட்ட திட்டமிடல் பிரிவு
- புள்ளிவிபர பிரிவு
- வெடி மருந்துப் பொருட்கள் பிரிவு
- அளவை கூறும், தரச் சேவை பிரிவும்
- மோட்டார் வாகன பிரிவு
- பொறியியலார் பிரிவு
- உள்ளக கணக்குப் பிரிவு
- மனிதவளமும் உற்பத்தித் திறன் மேம்படுத்தும் பிரிவு
- மாவட்ட காணி பயன்பாட்டு பிரிவு
- செய்தி பிரிவு
- பௌத்த நடவடிக்கை பிரிவு
- கலாச்சார பிரிவு
- அரச சார்பற்ற அமைப்பு பிரிவு
- சமூக சேவைப் பிரிவு
- சமரச பயிற்சி பிரிவு
- அனர்த்த முகாமைத்துவ பிரிவு
- சிறுவர் பாதுகாப்பு பிரிவு
- நுகர்வோர் அதிகார சபை
- தொழில்நுட்ப அபிவிருத்தி சபை
- அனர்த்த உதவி சேவை பிரிவு
- தேசிய ஒருங்கிணைப்பு பிரிவு
- விளையாட்டு பிரிவு
- ஆலோசனை பிரிவு
- தேசிய உர செயலகம்
- விவசாய பிரிவு
- தொழில் சேவை மத்திய நிலையம்
- மகளிர் அபிவிருத்தி பிரிவு
- விசாரணை பிரிவு
- சிறுவர் உரிமை பிரிவு
- ஆரம்ப சிறுவர் பராய அபிவிருத்தி பிரிவு
- காணி பிரிவு
- சிறு கைத்தொழில் பிரிவு
- பிரதேச செயலகங்கள்

## 1.8 மாவட்டத்தின் தகவல்கள்

வடமேல் மாகாணத்தினுள் அமைந்துள்ள குருணாகல் மாவட்டத்தில் சதுர அடி அளவு சதுர கிலோ மீட்டர் 4900.62 ஆகும். அதாவது ஹெக்டயார் 490062 ஆகும். 30 பிரதேச செயலாளர் பிரிவுகளாகும். கிராம சேவை பிரிவுகள் 1610 உரித்துடையதாகும். மாவட்டத்தின் மொத்த கிராமங்களின் எண்ணிக்கை 4432 ஆவதுடன், தேர்தல் பிரிவுகள் 14 ஆகும். மாவட்டத்தில் 01 மாநகர சபையும் 01 நகர சபையும் உள்ளது. 19 பிரதேச சபைகளும் உண்டு. குருணாகல் மாவட்டத்தில் 06 கல்வி வலையங்கள் உள்ளன.

ஓப்பீட்டளவில் குருணாகல் மாவட்டம் 5 மாவட்டங்களினால் சூழப்பட்டுள்ளது. அதாவது அதாவது வடக்கில் அநுராதபுர மாவட்டம், கிழக்கில் மாத்தளை மாவட்டம், தெற்கில் கம்பஹ மற்றும் கேகல்லை மாவட்டங்கள், மேற்கில் புத்தளம் மாவட்டமாகும். மாவட்டத்தின் அமைப்பு வடக்கின் கூட்டிணைப்பு 228 – 333 மற்றும் கிழக்கின் கூட்டிணைப்பு 104 – 178 இடையிலாகும்.

புராதன நிலைப்பாட்டை பற்றி பேசும் போது குருணாகல் மாவட்டம் இலங்கையில் மற்ற மாவட்டங்களை விட அதிக விசேட நிலைப்பாட்டை உடையது. இலங்கையில் காணப்பட்ட நான்கு அரசாட்சிகளிலும் குருணாகல் மாவட்டத்தில் இருந்தமைப் பற்றி குறிப்பிடத்தக்கதாகும். பண்டுவஸ்நுவர, குருணாகல், யாபஹுவ, தம்பதெனிய ஆகியனவாகும். இந்த அரசாட்சி காலங்களில் நல்லெண்ணமுள்ள அரசர்கள் இருந்தது பற்றி சாட்சிகள் அதிகளவில் காணப்படுகின்றன.

மாவட்டத்தில் நீர் வழங்களை பற்றி கவனத்தில் எடுக்கும் போது 04 பிரதானமாக ஆறு வடிகால்களினால் மூடப்பட்டுள்ளது. அதாவது வடக்கில் கலாஓய ஆறும், மத்திய பிரதேசத்தில் மீ ஒய மற்றும் தெதுரு ஒய ஆறும், தெற்கில் மா ஒய ஆறு என்ற வகையிலாகும். இந்த நீர் வளங்களினால் ராஜாங்கன, உஸ்கல சியம்பலன்கமுவ, ஹக்வடுனாஓய, கிம்புல்வானா ஒய, பதலகொட, பாலுகடவல, மாகல்ல, அதரகல்ல, மெடியாவ, வென்னொருவ, அம்பகொலவெவ உற்பட பாரியளவிலானதும் சிறிய அளவிலானதுமான நீர் வழங்கள் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

மாவட்டத்தில் மத்திய ஆண்டு மழை வீழ்ச்சி 900 – 2200 மில்லி மீட்டர் இடையிலாகும். வட கிழக்கு திசை காற்றும் பருவக்காற்றினால் பிரதானமாக அதிகளவில் மழை வீழ்ச்சி கிடைக்கப்பெறுகின்றது.

### பிரதேச செயலகங்கள்

குருணாகல் மாவட்ட செயலகத்தின் நிருவாகத்தின் கீழ் காணப்படும் பிரதேச செயலகங்களின் எண்ணிக்கை முப்பதாகும். இவ் பிரதேச செயலகங்களுக்கு பிரதானமாக கீழ் காணப்படும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு ஏற்படுகின்றது.

- 1610 கிராம உத்தியோகத்தர்களின் நடவடிக்கைகளில் நிருவாகமும் மேற்பார்வையும்.
- கள உத்தியோகத்தர்களின் நடவடிக்கைகளில் நிருவாகமும் மேற்பார்வையும்.
- சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களது நிருவாகமும் மேற்பார்வையும்.
- பொது மக்களின் காணி பற்றிய கடமை மற்றும் மின் எதிர்ப்பு பற்றிய நடவடிக்கை
- ஓய்வு பெற்றவர்களுக்கு கொடுப்பனது செலுத்துதல் பற்றிய பணிகள்.
- ஆண்டு தோறும் வாக்குப் பட்டியலினை திருத்தம் செய்தல்
- கல், மணல் மற்றும் மரம் ஆகியற்றிற்கு உரிமப்பத்திரம் வழங்குதல்
- திருமணங்கள், பிறப்புகள், மரணங்களை பதிவு செய்யும் நடவடிக்கை
- ஆட்களை பதிவு செய்யும் நடவடிக்கை
- பொது மக்களின் அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கை
- வாகனங்களுக்காக வருமான உரிமப் பத்திரம் வழங்குதல்.

இதன்படி பொதுமக்களின் அன்றாட பிரச்சினைகள் மற்றும் தேவைகளை உடனடியாக தீர்ப்பதற்கு உள்ள பிரதேச வாரியான நிருவாக கூறாக பிரதேச செயலகம் நடவடிக்கை மேற்கொள்ளும்.

## 1.10 மாவட்ட திட்டம்

# குருணாகல் மாவட்டம்

| பி.செ. அலுவலகம் | கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின்எண்ணிக்கை |
|---|---|
| 1. கிரிபாவ | 35 |
| 2. கல்கமுவ | 62 |
| 3. எஹடுவெவ | 35 |
| 4. மாஹோ | 68 |
| 5. அம்பன்பொல | 28 |
| 6. கொடவெஹெர | 31 |
| 7. ரஸ்னாயகபுர | 28 |
| 8. நிகவெரடிய | 42 |
| 9. பொல்பிதிகம | 82 |
| 10. இப்பாகமுவ | 74 |
| 11. கனேவத்த | 42 |
| 12. ரிதீகம | 113 |
| 13. மாவத்தகம | 71 |
| 14. மல்லவபிடிய | 45 |
| 15. குருணாகல் | 54 |
| 16. மாஸ்பொத | 33 |
| 17. வீரம்புகெதர | 38 |
| 18. பொல்கஹவெல | 84 |
| 19. அலவ்வ | 66 |
| 20. நாரம்மல | 54 |
| 21. குளியாப்பிடிய கிழக்கு | 45 |
| 22. குளியாப்பிடிய மேற்கு | 68 |
| 23. வாரியபொல | 56 |
| 24. பண்டுவஸ்நுவர கிழக்கு | 36 |
| 25. பமுணாகொடுவ | 36 |
| 26. கொபைகனே | 35 |
| 27. பண்டுவஸ்நுவர மேற்கு | 67 |
| 28. பிங்கிரிய | 52 |
| 29. உடுபத்தாவ | 43 |
| 30. பன்னல | 87 |
| | **1610** |






## 1.11 பணிக்குழுவின் அமைப்பு

**குருணாகல் மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் நிர்வாக அமைப்பு கீழ் காணப்படுகின்றது.**



## 2. மாவட்ட செயலகத்தில் உள்ள பலதரப்பட்ட பிரிவுகளின் சேவைகள்

### 2 2.1 நிருவாக பிரிவு.

மாவட்ட செயலக அலுவலர்களின் நிருவாக நடவடிக்கையும் 30 பிரதேச செயலகங்களின் மாவட்ட அடிப்படையில் நிருவாக நடவடிக்கைகளையும் நிறைவேற்றல் நிருவாக பிரிவின் பணியாகும். மாவட்டத்தின் கூட்டான நிருவாகத்தை நடாத்திச் செல்வதற்காக தேவையான நிர்வாக வழிநடாத்தலை நடைமுறைப்படுத்துவது நிர்வாக பிரிவினூடாகும்.

2018 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் 13 ஒழுக்காற்று கோவைகள் காணப்பட்ட போதும், 2018 ஆம் ஆண்டினுள் புதிதாக 6 ஒழுக்காற்று கோவைகள் ஆரம்பிக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டு இறுதியாகும் போது 02 கோவைகளின் நடவடிக்கைகளை முடிப்பதற்கு இயலுமானது. இவ் ஆண்டினுள் புதுப்படுத்திய துப்பாக்கிகளின் எண்ணிக்கை 1835 ஆவதுடன், 218 காவல் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டது.

2018 ஆம் ஆண்டினுள் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்ட வாகனங்களை பழுதுபார்ப்பிற்காக 882,315 ரூபா தொகையினையும் பிரதேச செயலகங்களுக்குரிய வாகனங்களை பழுதுபார்ப்பதற்காக 41146476 ரூபா தொகையும் செலவாகியுள்ளது.

2018 ஆம் ஆண்டில் பயிற்சி செயலமர்வுகள் கீழ் உள்ளவாறு நடாத்தப்பட்டுள்ளது.

- 2018 ஆம் ஆண்டு பயிற்சி திட்டத்திற்கு அமைய 65
- அரச நிருவாக அமைச்சின் அனுசரனையுடன் முகாமைத்துவமற்ற தரத்திலான பயிற்சிகள் 17
- கிராம உத்தியோகத்தர்களின் சேவை ஆரம்ப பயிற்சி 03
- அ.மு.உ.சே.1 வகுப்பு உத்தியோகத்தர்களது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை திட்டங்கள் 10 03

மாவட்ட மற்றும் பிரதேச நிருவாகத்திற்கு தொடர்புள்ள உத்தியோகத்தர்களது அறிவு மற்றும் திறமையினை மேம்படுத்துவதற்காக பலதரப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளது.

### 2.2 மாவட்ட திட்டமிடல் பிரிவு.

| தொ. இல. | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் ரூ.மி | செலவு ரூ. | கையிருப்பிலுள்ள பற்றுச்சீட்டுக்களின் பெறுமதி ரூ.மி. |
|---|---|---|---|---|
| 1 | அவசர கிராமீய அபிவிருத்தி திட்டம் கம்பெரலிய | 177,250,000.00 | 154,745,124.55 | 19,482,886.93 |
| 2 | நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்காக அபிவிருத்தி உதவி திட்டத்தை செயற்படுத்தும் திட்டம் | 7,007,843.06 | 1,037,805.43 | 5,823,880.62 |
| 3 | கிராம உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி செய்யும் விசேட திட்டம் (20 மில்லியன்) | 23,704,003.23 | 21,715,435.09 | - |
| 4 | கிராமீய உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி செய்யும் விசேட திட்டம் (11 ஆம் கட்டம்) | 10,500,000.00 | 8,874,529.27 | 1,435,110.04 |
| 5 | குிராம விளையாட்டு கைதானங்களை மேம்படுத்தும் திட்டம் | 88,313,338.34 | 61,277,360.97 | 14,172,295.28 |
| 6 | விரிவுபடுத்தப்பட்ட வரவு செலவு திட்டம் | 153,490,000.00 | 145,712,344.13 | 1,852,982.97 |
| 7 | கிராம சக்தி மக்கள் இயக்கம் | 96,326,838.97 | 94,840,056.06 | - |
| 8 | உட்கட்டமைப்பு வசதி மேம்படுத்தும் விசேட திட்டம் | 474,732,964.17 | 174,275,743.50 | 234,063,441.45 |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | வரவு செலவு சுற்றுலா மேம்பாட்டு திட்டம் - சுற்றுலா மேம்பாடு மற்றும் கிறிஸ்தியானி சமய நடவடிக்கை அமைச்சு | 41,357,820.82 | 18,049,479.82 | 8,861,734.55 |
| 10 | வரவு செலவு சுற்றுலா மேம்பாட்டு திட்டம் - சுற்றுலா மேம்பாடு மற்றும் கிறிஸ்தியானி சமய நடவடிக்கை திணைக்களம் | 3,070,985.08 | 1,356,884.87 | 1,476,401.33 |
| 11 | உள்ளக நடவடிக்கை மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சின் கிராம தெருக்களை மேம்படுத்தும் திட்டம் | 83,896,508.56 | 11,186,594.86 | 61,980,498.41 |
| 12 | “சுகித புரவர” சிறு நகர அபிவிருத்தி திட்டம் | 23,353,017.04 | 14,145,552.60 | 5,297,906.93 |
| 13 | மாதிரி மண் பாதுகாப்பு பாடசாலை திட்டம் | 1,000,049.09 | 973,988.17 | - |
| 14 | வனஜீவிகளை பாதுகாக்கும் திட்டம் | 5,079,802.78 | 316,235.38 | 1,349,216.58 |
| 15 | குளத்துடன் கிராமம் நிகழ்ச்சித் திட்டம் | 6,699,782.73 | 3,029,280.38 | 1,137,565.91 |
| 16 | பிரதேச அபிவிருத்தி திட்டத்தை செயற்படுத்துதல் - முதலீட்டு மேம்பாடு /உட்கட்டமைப்பு வசதி மற்றும் சமூக கலாச்சார அபிவிருத்தி திட்டம் (கட்டமைப்பு அல்லது விலைக்கு வாங்குதல்) | 13,918,402.49 | 2,344,362.82 | 8,892,291.56 |
| 17 | பிரதேச அபிவிருத்தி திட்டத்தை செயற்படுத்தல் - வீடு மேம்படுத்தல் /வாழ்வாதார அபிவிருத்தி திட்டம் (பொருட்கள் மற்றும் உபகரணங்களை வழங்குதல்) | 1,457,220.00 | 1,271,329.12 | 103,425.00 |
| 18 | ஊட்டச் சத்திற்காக பல துறை நடவடிக்கை திட்டம் | 2,945,675.00 | 2,923,326.37 | - |
| 19 | வளர்ச்சியடையாத விஹாரைகளை மேம்படுத்தும் திட்டம் | 64,930,000.00 | 55,159,886.74 | 8,365,827.66 |
| 20 | வளர்ச்சியடையாத அறநெறி பாடசாலைகளை மேம்படுத்தும் திட்டம் | 21,579,287.10 | 20,547,414.63 | 835,833.07 |
| **மொத்த கூட்டுத் தொகை** | | **1,300,613,538.46** | **793,782,734.76** | **375,131,298.29** |

## 2.3 வெடிமருந்து பொருட்கள் பிரிவு.

அரச பாதுகாப்பு அமைச்சின் கீழ் நியமிக்கப்பட்ட உதவி வெடிமருந்து பொருட்கள் கட்டுப்பாட்டாளரின் மேற்பார்வையின் கீழ் செயற்படுத்தப்படும்.

வெடிமருந்து பொருட்கள் பிரிவின் பணிப் பொறுப்பாவது,

- மாவட்டத்தினுள் வர்த்தகம் / வர்த்தகமற்ற கருங்கல் உடைப்பதற்காக உரிமப்பத்திரம் வழங்குதல்.
- பட்டாசு விற்பனைக்கு / தயாரிப்பதற்கு உரிமப்பத்திரம் வழங்குதல்.
- ஆயுதங்களுக்கு ரவைகள் வழங்குதல் (விவசாய / சுய பாதுகாப்பிற்கான ஆயுதங்களுக்கு)
- வெடி மருந்து பொருட்களை களஞ்சியப்படுத்தல் / வர்த்தக முகவர்களை மேற்பாவை செய்தல்.
- வழங்கப்பட்ட வெடி மருந்த அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 672
- ரவைகளை பெற்றுக் கொள்வதற்காக வழங்கப்பட்ட கடிதங்களின எண்ணிக்கை 1352
- பட்டாசு விற்பனைக்காக வழங்கப்பட்ட உரிமப்பத்திரங்களின் எண்ணிக்கை 65
- பட்டாசு பொருட்களை தயாரிப்பதற்காக வழங்கப்பட்ட உரிமப்பத்திரங்களின் எண்ணிக்கை 08
- வெடிமருந்து பொருட்களை இறக்குமதி செய்வதற்கான உரிமப்பத்திரம் 02
- வெடிமருந்து பொருட்களின் வர்த்தக முகவர்களின் எண்ணிக்கை 07
- வெடி மருந்து பொருட்களின் களஞ்சியங்களின் எண்ணிக்கை 07

## 2.4 செய்திப் பிரிவு.

மாவட்டத்தில் அபிவிருத்தின்னு உரிய தகவல்களை ஊடகங்கள் மூலம் பொது மக்களுக்கு பெற்றுக் கொடுத்தல் செய்திப் பிரிவின பிரதான பணியாகும். அதற்காக 2018 ஆம் ஆண்டினுள் கீழ் காணப்படும் நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டுள்ளது.

- மாவட்டத்தில் அபிவிருத்தியிற்கு உரிய 52 செய்தி அறிவித்தல்கள் மற்றும் புகைபடங்கள் செய்தி திணைக்களத்தின் இணையத்தளத்திற்கும் ஊடகத்திற்கும் அனுப்புதல்.
- மாவட்டத்தில் அபிவிருத்தியிற்கு உரிய நடவடிக்கைக்காக 39 ஊடக நடவடிக்கை மேற்கொள்ளல்.
- குருணாகல் மாவட்டத்திற்குரிய 340 விசேட செய்தி அறிக்கைகள் மாவட்ட செயலாளரின் கவனத்திற்கு முன் வைத்தல் மற்றும் உரிய இடங்களுக்கு அனுப்புதல்.
- விசல் குருணாகல் நீர் மற்றும் சுகாதார திட்டம் தொலைகாட்சி அறிக்கைத் திட்டத்தை ஒழுங்கமைத்தல்.

## 2.5 மாவட்ட சமுர்த்தி பிரிவு.

ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வழுவூட்டல் அமைச்சும் சமுர்த்தி திணைக்களத்தின் கீழ் செயற்படுத்துகின்ற செயற்திட்டங்களை மாவட்ட மட்டத்தில் ஒருங்கிணைப்பது இப் பிரிவின் பிரதான பணியாகும்.

சமுர்த்தி திட்டத்தை செயற்படுத்துவதற்காக மாவட்டத்தினுள் அமைக்கப்பட்டுள்ள நிறுவனங்கள்

- சமுர்த்தி வங்கி 120
- சமுர்த்தி பொது வங்கிகள் சங்கங்கள் 30
- சமுர்த்தி தலைமையகம் 30

- **பொருளாதாரத்தை வலுவூட்டல் மற்றும் கிராம அபிவிருத்தி பிரிவு.**

| வேலைத்திட்டம் / நிகழ்ச்சித்திட்டம் | ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டு தொகை (ரூ. மி.) | கிடைக்கப் பெற்ற ஒதுக்கீட்டு தொகை (ரூ. மி.) | செலவு (ரூ. மி.) | வரவு (ரூ.மி) | மீதி ஒதுக்கீடு (ரூ.மி) |
|---|---|---|---|---|---|
| பொருளாதார வலுவூட்டலும் கிராம அபிவிருத்தி பிரிவு | 82.565 | 61.871 | 56.852 | 4.565 | 0.454 |
| சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அபிவிருத்தி பிரிவு | 23.597 | 20.445 | 18.996 | 0.965 | 0.484 |
| நிறுவன அபிவிருத்தி பிரிவு | 11 | 11 | 8.6 | 0.328 | 2.072 |
| துறைசார்ந்த அமைப்புக்கள் பிரிவு | 4.652 | 3.336 | 1.933 | 1.308 | 0.095 |
| மனிதவள அபிவிருத்தி பிரிவு | 4.35045 | 3.048 | 2.898 | 0.061 | 0.089 |
| தகவல் தொழில்நுட்ப பிரிவு | | 0.48 | 0.366 | 0.114 | |
| திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு பிரிவு | 0.552 | 0.669 | 0.454 | 0.013 | 0.202 |
| **கூட்டுத் தொகை** | **127.036** | **100.852** | **90.099** | **7.240** | **3.513** |

- **மனிதவள அபிவிருத்தி பிரிவு**

| | கிடைக்கப் பெற்ற ஒதுக்கீட்டு தொகை (ரூ.மி) | செலவு (ரூ.மி) | மீது ஒதுக்கீட்டு தொகை (ரூ.மி) |
|---|---|---|---|
| விடயத்திற்குரிய பயிற்சி | 0.103 | 0.298 | 0.005 |
| விடயத்திற்குரிய பயிற்சி | 0.2 | | |

- **சமூக நலன்புரி பிரிவு**.

மானியங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை - 136587

தொகை ரூ. மில்லியன் 326.08

2018 ஆம் ஆண்டில் மாவட்டத்தில் உதவித் தொகை பிரிக்கப்பட்ட விதம்

- **சமூக பாதுகாப்பு பிரிவு.**

| பிரதிபலன் பெறுபவருக்கு செலுத்தப்படும் தொகை (ரூ) | கட்டாயமாக சமித்தல் (ரூ) | சமூக பாதுகாப்பு (ரூ) | வீடு சீட்டு (ரூ) | மொத்த தொகை |
|---|---|---|---|---|
| 3,379,793,750 | 339,987,800 | 165,809,700 | 82,904,850 | 3,968,496,100 |

**1. சமுர்த்தி சமூக பாதுகாப்பு திட்டம்.**

| | கொடுப்பனவு எண்ணிக்கை | செலுத்தப்பட்ட தொகை ரூ.மி. |
|---|---|---|
| பிறப்பு | 2301 | 13.787 |
| விவாகம் | 2856 | 21.42 |
| வைத்தியசாலைப்படுத்தல் | 6594 | 17.866 |
| மரணம் | 3710 | 55.65 |
| சிப்தொர | 14214 | 21.321 |
| **மொத்த தொகை** | | **130.04** |

**2. சமுர்த்தி சிப்தொர புலமை பரிசில் திட்டம்.**

வழங்கப்பட்ட சிப்தொர புலமை பரிசில் பிரதிபலன்

| கல்வி ஆண்டு | புலமை பரிசில் |
|---|---|
| 2016/2018 | 712 |
| 20017/2019 | 712 |
| 2018/2020 | 1085 |

| விபரம் | புலமைபரிசில் தவணை நிதிகளின் ண்ணிக்கை | தொகை |
|---|---|---|
| 2016 /2020 வரை | 14214 | 21,321,000 |

**3. வீட்டு சீட்டிலுப்பு திட்டம்.**

| வெற்றியாளர்களின் எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட தொகை (ரூ.மி) | பரிசு தொகை விடுவிக்கப்பட்ட எண்ணிக்கை | விடுவிக்கப்பட்ட தொகை (ரூ.மி) |
|---|---|---|---|
| 360 | 72 | 342 | 68.4 |

- **கணக்கு பிரிவு.**

**முன்னேற்ற பீ கணக்கு.**

| ஒதுக்கீடு | முன்பணம் | செலவு |
|---|---|---|
| 25,080,000 | 25,080,000 | 25,080,000 |

**பொது வைப்பு கணக்கு. 6000-0-0-16-0-123**

| ஆரம்ப மீதி | கிடைப்பனவு | செலுத்துகை | ஆண்டு இறுதியில் மீதி |
|---|---|---|---|
| 1,124,642.01 | 200,359,337.20 | 199,992,216.52 | 1,491,762.69 |

**கணக்கு விசாரணைக்காக விடை சமர்பித்தல்.**

| விசாரிக்கப்பட்ட நிறுவனம் | கிடைக்கப் பெற்ற விசாரணைகள் | சமர்பிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| தேசிய கணக்காய்வு அலுவலகம் | 9 | 9 |
| கூ.அ திணைக்களம் | 0 | 0 |

- **சம்பள பிரிவு.**

2000-2010 கால எல்லைக்குரிய பணியாளர்களின் சேமலாப நிதியத்தினால் திணைக்களத்திடத்தில் அளிக்கப்பட்ட ரூ. 23,617,013 கூடுதல் தொகையினை தீர்த்தல்.

| | |
|---|---|
| மொத்த கூடுதல் தொகையின் பெறுமதி (ரூ) | 23,617,013 |
| செலுத்தப்பட்ட தொகை (ரூ) | 317,699.78 |
| தீர்வு மூலம் திணைக்களத்திற்கு மீதமான தொகை (ரூ) | 23,299,313 |

- **களத் தொழில் பிரிவு.**

- சமுர்த்தி சமூக வங்கிகளில் வைப்புக் கணக்குகளின் எண்ணிக்கையின் முன்னேற்றம்.

| 2017 எண்ணிக்கை | 2018 எண்ணிக்கை | முன்னேற்றத்தின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1465760 | 1509431 | 43671 |

- சமுர்த்தி சமூக வங்கியில் வைப்புத் தொகையின் முன்னேற்றம்.

| 2017 தொகை ரூ.(மிலி) | 2018 தொகை ரூ.(மிலி) | முன்னேற்றம் தொகை ரூ.(மிலி) |
|---|---|---|
| 11,867.02 | 13,225.31 | 1,358.29 |

- சமுர்த்தி சமூக வங்கியில் கடன் வழங்குவதன் முன்னேற்றம்.

| 2017 கடன் விடுவிக்கப்பட்ட எண்ணிக்கை | 2018 கடன் விடுவிக்கப்பட்ட எண்ணிக்கை | முன்னேற்றத்தின் எண்ணிக்கை |
|---|---|---|
| 932,330 | 1,002,849 | 67,682 |

- சமுர்த்தி சமூக வங்கியில் கடன் வழங்குவதன் நிதியின் முன்னேற்றம்.

| 2017 கடன் விடுவிக்கப்பட்ட தொகை | 2018 கடன் விடுவிக்கப்பட்ட தொகை | முன்னேற்றத்தின் தொகை |
|---|---|---|
| 24,355,535,463 | 28,870,825,856.70 | 4,515,290,393.33 |

- நிதியத்தின் முதலீட்டு நடவடிக்கை.

| 2017 | 2018 | முன்னேற்றம் |
|---|---|---|
| 10,447,037,168 | 11,207,633,120 | 760,595,951 |

**2018 -சமுர்த்தி சமூக வங்கியின இலாபம் / நட்டம் பற்றிய தகவல்கள்.**

- ஒரு கோடியினை மேற்பட்ட வங்கிகளின் எண்ணிக்கை - 08
- 70 லட்சத்திற்கு மேற்பட்ட வங்கிகளின் எண்ணிக்கை - 14
- 50 லட்சத்திற்கு மேற்பட்ட வங்கிகளின் எண்ணிக்கை - 36
- 25 லட்சித்திற்கு மேற்பட்ட வங்களின் எண்ணிக்கை - 46
- 10 லட்சத்திற்கு மேற்பட்ட வங்களின் எண்ணிக்கை - 15
- 10 லட்சத்திற்கு குறைந்த வங்களின் எண்ணிக்கை - இல்லை
- நட்டமடைந்த வங்கிகளின் எண்ணிக்கை - 14

**2.6 சமூக பாதுகாப்பு பிரிவு.**

சமூக பாதுகாப்பு ஓய்வூதிய திட்டம் சமூகத்தை சக்தியூட்டல் அமைச்சின் கீழ் உள்ள இலங்கை சமூக பாதுகாப்புச் சபையினால் சுயதொழில் மற்றும் முறைசாரா துறையில் தொழில் தேடுபவர்களுக்காகவும், பலதரப்பட்ட துறைகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்காகவும் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்திற்கு 2018 ஆம் ஆண்டில் குருணாகல் மாவட்டத்தில் 5000 உறுப்பினர்களை சேர்த்துக் கொள்ளும் இலக்கினை தாண்டி 10334 உறுப்பினர்களை சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். ஆட்சேர்ப்பு மற்றும் தவணை கூட்டத்தின் தொகையாக 38,151,761 ரூபாவினை ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1) | சந்தாதாரர்களை சேர்த்துக் கொள்ளுதல் | - | 10334 |
| 2) | சந்தாதாரர்களை சேர்த்துக் கொண்ட பங்களிப்பு தொகை | - | 3,095,287 |
| 3) | தபால் அலுவலகம் மூலம் அறவிடப்பட்ட தவணைத் தொகை | - | 22,155,456 |
| 4) | பி.செ. அலுவலகத்தினால் அறவிடப்பட்ட தவணை தொகை | - | 9,205,215 |
| 5) | வங்கியினால் அறவிடப்பட்ட தவணை தொகை | - | 2,460,534 |
| 6) | மாவட்ட செயலத்தின் சமூக பாதுகாப்பு பிரிவினால் | - | 1,235,268 |
| | | | 38,151,761 |

7) 2018 ஆண்டில் ஓய்வூதியம் பெறுபவர்களின் எண்ணிக்கை 364 ஆவதுடன், 2018 ஆம் ஆண்டில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்காக செலுத்தப்பட்டுள்ள மொத்த தொகை ரூ. 50,109,636 ஆகும்.

2018.12.31 ஆந் திகதி வரை குருணாகல் மாவட்டத்தில் மொத்த ஓய்வூதியம் பெறுபவர்களின் எண்ணிக்கை 4821 ஆகும்.

8) 2018 ஆண்டில் இறப்பு மற்றும் ஊனமுற்ற பயனாளிகளின் எண்ணிக்கை 13 ஆவதுடன், அதற்காக ரூ. 309,853 தொகை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

9) கல்வி பிரதிபலனாக 2018 ஆண்டில் 60 பிள்ளைகளுக்காக ரூ.647,254 தொகை வழங்கப்பட்டுள்ளது.

**2.7 அளவீட்டு அலகுகளின் தரநிலைகள் மற்றும் சேவைகள் பிரிவு.**

பொது மக்களினால் சமர்பிக்கப்படுகின்ற முறைபாடுகளை பரிசீலித்து அளவீட்டு உபகரணங்களது துல்லியத்தை உறுதிப்படுத்துவதனால் வாடிக்கையாளர்களை பாதுகாத்தல் மாவட்ட செயலாளருக்கு அளிக்கப்பட்ட இன்னொரு பொறுப்பாகும்.
இப் பிரிவின் 2018 ஆண்டின் செயற்பணி கீழ் காட்டப்பட்டுள்ளவாறு சுருக்கலாம்.

- சீல் வைத்ததனால் கிடைத்த வருமானம் :- ரூ. 24,491,051
- சீல் வைக்கப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை :- 47,162
- வியாபாரிகளின் எண்ணிக்கை :- 16,575

- வெற்றிகரமான சுற்றி வலைப்புகளின் எண்ணிக்கை :- 66
- முயற்சித்த சுற்றி வலைப்புகளின் எண்ணிக்கை :- 527
- அறவிடப்பட்டுள்ள அபராதத் தொகை :- ரு. 87,000
- அறிவுறுத்தப்பட்ட வியாபாரிகளின் எண்ணிக்கை :- 2500

**2.8 புள்ளிவிபரப் பிரிவு.**

இலங்கையில் தேசிய திட்ட தொகுப்பின் போது மற்றும் கொள்கை விமர்சனத்தின் போதும் தேவையான புள்ளி விபர தரவுகள் மாவட்ட மட்டத்தில் ஒன்று சேர்த்தல் மற்றும் சமர்பித்தல் மாவட்ட புள்ளிவிபரவியல் பிரிவினால் நிறைவேற்றப்படுவதுடன், தரவுகளை பரிசீலிப்பவர்களுக்கு அரச, கூட்டுத்தாபன, தனியார் நிறுவனங்கள் மற்றும் பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்பவர்களுக்காக தேவையான தகவல்களை பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. உரிய ஆண்டினுள் நிறைவேற்றப்பட்ட புள்ளி விபர நடவடிக்கை மற்றும் பணிகள் பற்றி சுருக்கமான விளக்கம் கீழ் காட்டப்பட்டுள்ளது.

**1. நெல் பற்றிய புள்ளி விபர தரவுகளை ஒழுங்கமைத்தல்.**

2017 / 18 பெரும் போகம் மற்றும் 2018 சிறு போகத்திற்காக நெல் அறுவடைக்காக பயிரிடப்பட்ட விதைக்கப்பட்ட மற்றும் வெட்டப்பட்ட வயல்களின் அளவுகள் கிராம உத்தியோகத்தர் பிரிவின் படி மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் படி பெற்றுக் கொண்டு மாவட்ட ஒன்றிணைக்கப்பட்ட அறிக்கையினை ஒழுங்கமைக்கப்பட்டது. இவ்வாறு பிரதேச செயலாளர் பிரிவின் படி தகவல்கள் பெற்றுக் கொள்வதற்காக எல்லா ஆண்டுகளிலும் பெரும் போகம் மற்றும் சிறு போகம் இரண்டும் மாவட்டத்தில் அமைந்துள்ள விவசாயம் செய்யப்பட்டுள்ள எல்லா நிலத் துண்டுகளின் படி கணக்கெடுக்கப்படும். மாவட்டம் மற்றும் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மதிப்பீடினை ஒழுங்கமைப்பதற்காக பயன்படுத்தப்படுவது அறுவடை செய்யப்பட்ட மொத்த நில அளவு மற்றும் ஆண்டு தேறும் நெல் அறுவடை மதிப்பீடு செய்யும் ஆய்வின் போது பெற்றுக் கொள்ளப்படும் சாதாரண அறுவடை பற்றிய மதிப்பீட்டினாலாகும். இவ் ஆண்டினுள் 2017 / 18 பெரும் போகம் மற்றும் 2018 சிறு போகம் வெவ்வேறாக நெல் அறுவடையினை மதிப்பீடு செய்யும் ஆய்வில் முழு மாவட்டமும் பிரதிநிதித்துவப்படுத்துமாறு நீர்பாசன திட்டத்தின் படி மேற்கொள்ளப்பட்டன. இத் தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக P1, P11 அறிக்கைகள் உபயோகப்படுத்தப்படும்.

**2. மக்கள் தொகை மற்றும் வீட்டு வசதி கணக்கெடுப்பு - 2021**

வீடு மற்றும் மக்கள் தொகை கணக்கெடுப்பு பிரதானமாக 3 கட்டளினால் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், அதன் முதலாம் கட்டமாக வரைபுகளை ஒழுங்கமைத்தல், குருணாகல் மாவட்டத்தில் 1610 கிராம உத்தியோகத்தர் எண்ணிடல் வரைபுகளை உபயோகித்து பிரிவுகளை வரைதல் மற்றும் மக்கள் தொகை கணக்கெடுப்பு ஒழுங்கமைக்கப்பட்டது. இந்த செயற்பாட்டின் போது தற்போது ஒழுங்கமைக்கப்பட்டுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் துல்லியத் தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக கிராம உத்தியோகத்தர் பிரிவு எல்லை, பிரதேச செயலக பிரிவு எல்லை மற்றும் மாவட்ட எல்லை போன்று புவியியல் அமைவு சரியானதா என்பதனை பரிசீலிக்கப்பட்டுள்ளது.

**3. மாவட்ட புள்ளிவிபரவியயல் கையேட்டினை ஒழுங்கமைத்தல்**

மாவட்ட ரீதியாக அபிவிருத்தி நடவடிக்கை திட்டமிடும் போது தேவையான தரவுக்ள மற்றும் புள்ளியியல் தகவல்களை புதுப்பித்து கொண்டு நடாத்துவதனால் அபிவிருத்தி நோக்கங்களை சாதிப்பதற்கும், நிருவாக நடவடிக்கைகளுக்கு வசதியாக்குவதற்கு இயலுமாகின்றது. இந்த தேவைகளை பூர்த்தி செய்துக் கொள்வதற்காக குருணாகல் மாவட்டத்திற்காக புள்ளிவிபரவியல் கையேடு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

**4. நகர்புற சில்லறை விலைகளை சேகரித்தல்**

வாராவார விலை, தொகுதி இலக்கத்தின் கீழ் உரிய காலத்தினுள் விலை ஒன்று சேர்த்து கொழும்பு பிரதான அலுவலகத்தில் விலை பிரிவிற்கு ஈ மேல் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. அதன் மூலம் பிரதேச ரீதியாக வாடிக்கையாளர் விலைப் பட்டியல் ஒழுங்கமைப்பதற்கு தேவையான விபரம் வழங்குவதற்கு முடியும்.

**5. உள்ளூர் உற்பத்தியாளரின் விலைக் கணக்கெடுப்பை ஒன்று சேர்த்தல்**

பிரதேச செயலக பிரிவு ரீதியாக உள்ளூர் உற்பத்தியாளர்களின் விலைகள் எல்லா பிரதேச செயலாளர் பிரிவுகளினாலும் பிரதான மத்திய நிலையங்கள் 3 னால் மற்றும் 4 மேலதிக நிலையங்களினாலும் ஒன்று சேர்த்து, அந்தந்த மாதங்களின் இறுதியிலும் சாதாரண விலைச் உறுதிப்படுத்தி விலை அறிக்கையினை கொழும்பு பிரதான அலுவலகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 6. தற்போதைய பயிர்கள் மற்றும் நிரந்தர பயிர்கள் பற்றிய புள்ளி விபரம்

தற்போதைய பயிர்கள் மற்றும் நிரந்தர பயிர் வகைகளில் விவசாய நில அளவு மற்றும் அறுவடை H2 அறிக்கை மூலம் பெற்றுக் கொண்டு மாவட்ட ஒருங்கிணைப்பு அறிக்கை ஒழுங்கமைக்கப்படும். இதன் கீழ்,

2017/18 பெரும் போகத்திற்காக தற்போதைய பயிர் வகைகள் 62 உம்,
2018 சிறுபோகத்திற்காக தற்போதைய பயிர் வகைகள் 62, நிரந்தர பயிர்கள் 32 களின் தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளது.

**மாதிரி ஆய்வுகள்.**

## 7. இலங்கையில் தொழிலாளர் சக்தியின் ஆய்வு

தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரிகளின் படி பிரதேச செயலக பிரிவு ரீதியாக ஆண்டில் 04 காலாண்டுகளுக்காகவும் மாவட்டத்தில் எல்லா இடங்களும் பிரதிநிதித்துவம்படும் வகையில் டெப்லட் கணனி மூலம் தகவல்களை ஒன்று சேர்த்து பரவலான ஆய்வினை மேற்கொள்ள இயலுமாயின. அதன் பெறுபேறு பிரதான அலுவலகத்தினால் 2018 ஆம் ஆண்டில் காலாண்டு படி வழங்க இயலுமாயின. மாவட்டத்தில் தொழிலாளர் சக்தி (15 ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட பொருளாதார ரீதியாக செயலில் உள்ள அனைவரும்) சேவையற்ற, சேவையில் உள்ள, ஆகிய பலதரப்பட்ட தகவல்கள் இதன் மூலம் வெளிடப்படும்.

## 8. மகளீர்களின் நல்லொழுக்கம் பற்றிய ஆய்வு

( ஆரம்ப அட்டவணைப்படுத்தல் - கி.உ. பிரிவு 21)

இங்கு 15 வயதிற்கும் அதற்கு மேற்பட்ட மகளீர்களின் சமூக அறிவியல் தகவல்கள், சுகாதார மற்றும் பாதுகாப்ப, பொருளாதாரம் மற்றும் பொருளாதாரமற்ற நடவடிக்கைகளில் ஈடுபடல் மற்றும் சமூக பொருளாதார பின்னணி ஆகிய தகவல்கள் இந்த ஆய்வினால் செயற்படுத்தப்படும்.

## 9. விவசாய வீட்டு உபகரணங்கள் பற்றிய ஆய்வு-2017/18

விவசாய துறையில் ஏற்பட்டுள்ள பரவலான வேறுபாட்டினையும் விவசாயத் துறைக்கு தேவையான திட்டங்களின் முன்னேற்றத்தினையும் அளப்பதற்கு தேவையான தரவுகளை வெளிப்படுத்துவதற்காக தொகைக் கணிப்பீடிற்காக 2500 குழுக்களை தேர்ந்தெடுத்து மாதிரிப்படி பிரதேச செயலக ரீதியாக மாவட்டம் முழுவதும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தகவல்களை ஒன்று சேர்த்து பரவலாக ஆய்வு செய்ய முடிந்தது.

## 10. சுற்றுலா செலவு பற்றிய ஆய்வு - 2017/18

தேசிய கணக்கு ஒழுங்கமைப்பதற்காக தேவையான தரவுகள் பெற்றுக் கொள்வதற்காக 25000 வீடுகளை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாதிரிப்படி பிரதேச செயலக பிரிவு ரீதியாக மாவட்டத்தில் எல்லா இடங்களும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தகவல்களை ஒன்று சேர்த்து பரவலான ஆய்வினை மேற்கொள்ள இயலுமாயின.

## 11. கட்டமைப்பு கைத்தொழில் ஆய்வு

2018 ஆம் ஆண்டில் கட்டமைப்பு கைத்தொழில் துறையின் முன்னேற்றத்தை தேடிப்பார்ப்பதற்காக ஆண்டு கணக்கெடுப்பதற்கு இது பயன்படுத்தப்பட்டது.

## 12. ஆண்டு கைத்தொழில் ஆய்வு

2018 ஆம் ஆண்டில் கைத்தொழில் துறையின் முன்னேற்றத்தை தேடிப்பார்ப்பதற்காக ஆண்டு கணக்கெடுப்பதற்காகவும் கைத்தொழில், வர்த்தக மற்றும் சேவை கணக்கெடுப்பு தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரிகளினுள் நிறைவேற்றப்பட்டது. இங்கு சிறு அளவு, மத்திய அளவு மற்றும் பாரியளவு என்ற வகையில் ஆய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

## 13. ஆண்டு தோறும் தென்னை உற்பத்திச் செலவு மதிப்பீடு செய்யும் ஆய்வு.

குறித்தவாறு தேர்ந்தெடுக்கப்பட்ட தென்னம் தோட்ட உரிமையாளர்களினால் மேற்கூறப்பட்ட ஆய்வினை மேற்கொண்டு ஒரு ஏக்கரில் தென்னை உற்பத்திக்காக செலவிடப்படுகின்ற செலவு மற்றும் கிடைக்கப் பெறுகின்ற இலாபம் மற்றும் அதனுடனான பலதரப்பத்த தரவுகள் சமர்ப்பிப்பதற்கு இயலுமாயின.

## 14. கால்நடைகள் பற்றிய புள்ளிவிபரம்

இதன் மூலம் பிரதேச செயலக பிரிவு ரீதியாக 9 மிருக வகைகளின் தகவல்கள் ஒன்று சேர்க்கப்பட்டது.

**15. இறைச்சிக்காக அறுக்கப்படும் மிருகங்கள் பற்றிய புள்ளிவிபரம்**

ஆண்டுதோறும் இறைச்சிக்காக அறுக்கப்படும் மிருகங்களின் புள்ளிவிபரத் தகவல்கள் மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை வாரியாக உரிமப் பத்திரங்களை பெற்றுக் கொண்டுள்ள நிறுவனங்களின் தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது

**16. வெட்டி வீழ்த்தப்பட்ட மரக் தண்டுகளை மதிப்பீடு செய்தல்**

தேசிய கணக்குகளை மதிப்பீடு செய்து மேலாண்மை செய்வதற்காக தகவல்களை ஒன்று சேர்ப்பதற்கு பிரதேச செயலக ரீதியாக மாவட்டம் முழுவதும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தகவல்களை ஒன்று சேர்க்கப்பட்டது.

**17. உள்ளூராட்சி புள்ளிவிபரவியல் நடவடிக்கை**

மாநகர சபை, நகர சபை மற்றும் பிரதேச சபை மட்டத்தில் அந்தந்த நிறுவானங்களில் பிரதி நிதித்துவப்படுத்துமாறு எல்லா உள்ளூராட்சி சபைகளிலும் தரவுகளை ஒன்று சேர்த்துக் கொள்ள முடிந்தது. உள்ளூராட்சி சபைகளினதும் செலவு அறிக்கை, பொது தகவல்கள் மற்றும் வருமான ஆய்வறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டது.

## 2.9 தேசிய உரங்கள் செயலகம்.

இப் பிரிவினால் 2017 ஆம் ஆண்டு செய்யப்பட்ட பணிகளை பிரதானமாக சில பகுதிகளாக பிரித்து காட்டாலாம்.

| தொ. இலக்கம் | நிகழ்ச்சித்திட்டம் | ஒதுக்கீடு ரூ. | செலவு ரூ. | பயனடைவோறின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | உரம் உதவி நிகழ்ச்சித்திட்டம் | 2,413,494,000 | 1,984,205,500 | 261594 |
| 2 | பயிற்சி மற்றும் அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டம் | 710,000 | 370,075 | 650 |
| 3 | இரசாயன பசளை மாதிரிகளை பரிசீலித்தல் | | 53,000 | - |
| 4 | மொத்த உரத்தை சரிபார்த்தலும் களஞ்சிய பரிசோதனையும் | | 101,000 | - |
| 5 | முன்னேற்ற பரிசீலனை மற்றும் உரம் துணைக்குழு | | 27,260 | - |

## 2.10 அரச சார்பற்ற அமைப்பு பிரிவு.

| **நிகழ்ச்சித்திட்டம்** | **கலந்துக் கொள்ளல்** | **செலவிடப்படும் தொகை ரூ.** |
|---|---|---|
| அரச சார்ப்பற்ற அமைப்பு ஒருங்கிணைப்பு கூட்டம் | 56 | 10,280 |

## 2.11 கலாச்சார பிரிவு.

2018 ஆண்டில் செய்யப்பட்ட பணிகளை சில பகுதிகளாக பிரித்து காட்டலாம்.

| **தொ. இல.** | **நிகழ்ச்சித்திட்டம்** | **ஒதுக்கீடு** | **செலவிடப்பட்ட தொகை** |
|---|---|---|---|
| 01 | மத நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | ரூ.10,000/= (கலாச்சார நடவடிக்கை திணைக்களம்) | ரூ.10,000/= |
| 02 | கலை சங்கம் சமய நடவடிக்கை திட்டம் | கலை சங்கத்தின் பங்களிப்பு | |
| 03 | அரச நாட்டிய மாவட்ட போட்டியினை நடாத்துதல் | ரூ.9,500/= (கலாச்சார நடவடிக்கை திணைக்களம்) | ரூ.9,500/= |

| | | | |
|---|---|---|---|
| 04 | சுதந்திர தின நிகழ்ச்சித் திட்டம் | - | - |
| 05 | காவிய கவிதை போட்டி | கலாச்சார நடவடிக்கை திணைக்களம் அனுசரனை | |
| 06 | தங்க விருது வழங்கும் விழா | உத்தியோகத்தர்களின் செலவு ரூ.50,000/= | |
| 07 | மாவட்ட கலாச்சார அமைப்பினால் ஒழுங்கமைக்கப்பட்ட புத்தாண்டு விழா | - | ரூ.25,000/= |
| 08 | மாவட்ட புகைப்பட செயலமர்வு | ரூ.25,000/= (கலாச்சார நடவடிக்கை திணைக்களம்) | ரூ.25,000/= |
| 09 | மாவட்ட விவாதம் போட்டி | (கலாச்சார நடவடிக்கை திணைக்களம்) ரூ.20,000/= | ரூ.8,182/= |
| 10 | வானில் சுதந்திர பட்டம் விடும் நிகழ்ச்சித்திட்டம் | | ரூ.10,634/= |
| 11 | மாவட்ட விவாதம் இறுதிச் சுற்று | | ரூ.1,705/= |
| 12 | அரச சிறுவர் சித்திர நிகழ்ச்சித்திட்டம் - குருணாகல் | கலாச்சார நடவடிக்கை திணைக்களம் அனுசரனை | |
| 13 | சிறுவர் சித்திர நிகழ்ச்சித்திட்டம் | - | - |
| 14 | கலை நிறுவனங்களின் உருவெடுக்கும் விழா | - | - |
| 15 | அனகாரிக தர்மபால அஞ்சலி | - | ரூ.8,000/= |
| 16 | மாவட்ட நாட்டிய நிகழ்ச்சித்திட்டம் | கலாச்சார நடவடிக்கை திணைக்களம் அனுசரனை | |
| 17 | புத்தக கண்காட்சி | - | - |
| 18 | மாவட்ட இலக்கிய விழா | ரூ.75,000/= (கலாச்சார நடவடிக்கை திணைக்களம்) | ரூ.125,000/= (வெளியாளர்களின் அனுசரனை) |
| 19 | கலைஞர்களின் சுமுக சந்திப்பு மாவட்ட நிகழ்ச்சித்திட்டம் | - | - |

இதற்கு மேலதிகமாக முஸ்லிம் கலாச்சார நிகழ்ச்சித்திட்டங்கள் கீழ் காட்டப்பட்டுள்ளது.

- முஸ்லிம் பள்ளிகளை பதிவு செய்யும் நடவடிக்கை.
- பங்களிப்பு சபையினை நியமித்தல் நடவடிக்கை மற்றும் அறிக்கை வழங்குதல்.
- அனைத்து மக்களுக்கும் ஆரோக்கியத்திற்கும் நலத்திற்கும் பிரார்த்திப்பதற்கான சமய நடவடிக்கை நடாத்துதல்.
- அராபி பாடசாலைகளை பதிவு செய்யும் நடவடிக்கை மற்றும் அறிக்கை அளித்தல்.
- முஸ்லிம் பள்ளி மற்றும் அராபி பாடசாலைகளை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் நடாத்துதல்.

### 2.12 பௌத்த நடவடிக்கை பிரிவு.

2018 ஆம் ஆண்டில் இப் பிரிவினால் நடாத்தப்பட்ட பிரதான பணியாவது,

| தொ. இல. | செயற்திட்டம் | நடைமுறைப் படுத்தப்பட்ட நிலையம் | கலந்துக் கொண்டவர்களின் எண்ணிக்கை | செலவிடப்பட்ட நிதிப் பெறுமதி ரூ. |
|---|---|---|---|---|
| 1 | ஆசிர்வாத பிங்கம | 1 | பணிக் குழுவினர் | - |
| 2 | **<u>அரச வெசக் விழாவிற்கு இணைவாக</u>** பிரத்தியக்சா அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் | 30 | இளைய, வயது முதிர்ந்தோர் யாவரும் | 900,000 |
| 3 | பத்து நாட்கள் பாவனா நிகழ்ச்சித்திட்டம் | 1 | போதைப் பொருளுக்கு அடியானவர்களுக்காக | - |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | பிரத்யவேக்ச நிகழ்ச்சித்திட்டம் (சிறுவர், இளய, மத வழிபாடு, பொது வழிபாடு) | 23 | சிறுவர், இளம், முதியோர் யாவரும் | 23,000 |
| 5 | பிரத்யவேக்ச ஆசிரிய பயிற்சி திட்டம் | 2 | துறவிகள் | - |
| 6 | பாலி மொழியினை மேம்படுத்துவதற்கான பரீட்சை நடாத்தல் மற்றும் செயலமர்வு | 2 | அறநெறி பாடசாலை ஆசிரியர்கள் | 77,150 |
| 7 | சிறுவர் மத வழிபாடு நிகழ்ச்சித்திட்டம் | 30 | அறநெறி பாடசாலை பிள்ளைகள் | 300,000 |
| 8 | அறநெறி பல்கலைகழக நிகழ்ச்சித்திட்டம் (ஆண்டுதோறும் சனிக்கிழமைகளில்) | 1 | அறநெறி பாடசாலை ஆசிரியர்கள் | 90,000 |
| 9 | மாவட்ட பரிசளிப்பு விழா | 1 | அறநெறி பாடசாலை பிள்ளைகள் | 192,496 |
| 10 | சில்மாதா செயலமர்வு | 4 | சில்மேனிகள் | |
| 11 | எட்டுநூறு அரச மரங்களை வழங்குதல் 43 விஹாரைகளுக்கு | 1 | விஹாரைகள் | 1,264,000 |
| 12 | அதிபொசன் தினம் | 1 | பௌத்த மக்களை அடிப்படையாக கொண்ட பொது மக்களுக்கு | - |
| 13 | சுகாதார மற்றும் பௌத்த மதரம் பற்றிய நிகழ்ச்சித்திட்டம் | 31 | பௌத்த மக்கள் | - |
| 14 | தொழிலாளர்கள் மற்றும் பௌத்த மதம் | 10 | பௌத்த மக்கள் | - |
| 15 | இலக்கியம் மற்றும் பௌத்த மதம் | 30 | பௌத்த மக்கள் | - |
| 16 | நடமாடும் சேவை திட்டம் மற்றும் உபகார விழா | 6 | பௌத்த மக்கள் | - |
| 17 | பக்தி பாடல்கள் திட்டம் | 31 | அறநெறி பாடசாலை பிள்ளைகள் | - |
| 18 | பௌத்த குறு நாடகம் | 31 | அறநெறி பாடசாலை பிள்ளைகள் | - |
| 19 | வெசக் வெளிச்ச கூடுகளை மதிப்பிடல் | 1 | நிறுவனம் | 250,000 |
| 20 | சுற்றாடல் மற்றும் பௌத்த மதம் | 30 | பௌத்த மக்கள் | - |
| 21 | அறநெறி பாட பரீட்சை | 1 | அறநெறி ஆசிரியர்கள் | 51,923 |
| 22 | அதிஸ்டான பூசை | 1 | அறநெறி பல்கலைகழகம், பாலி மாணவர்கள் | - |
| 23 | தகவல் தொழில்நுட்ப பயிற்சி (02 குழுக்களுக்காக) | 2 | பௌத்த நடவடிகை ஒருங்கிணைப்பு ஊழியர்கள் | - |
| 24 | அறநெறி பல்கலைகழக மாணவர்களுக்காக ஒரு நாள் மதவழிபாடு திட்டம் | 1 | அறநெறி பல்கலைகழக மாணவர்களள் | 52,025 |
| 25 | சங்க கூட்டமைப்பு | 1 | மாவட்டத்தின் மதகுருக்கள் | - |
| 26 | நெறிமுறைகளை ஆராயும் அறநெறி உரையாடல் திட்டம் | 12 | பணிக் குழுவினர் | - |
| 27 | மாணவ திறமைகளை மதிப்பிடும் மாவட்ட திட்டம் | 2 | 30 பிரதேச செயலக பிரிவுகளின் சிறுவர்கள் | - |
| 28 | நடுவர்களுக்கான பயிற்சி | 1 | ஆசிரிய கல்லுரி ஆசிரியர்கள் | 5,500 |
| 29 | அகில இலங்கை பயிற்சித் திட்டம் | 2 | 30 பிரதேச செயலக பிரிவுகளின் சிறுவர்கள் | 11,000 |
| 30 | தேசிய பாதுகாப்பு தினத்தை யொட்டி செய்யப்பட்ட சமய திட்டம் (சிலமேனிகளை பிரதானமாக கொண்டு) | 1 | | - |

| | | | | |
|---|---|---|---|---|
| 31 | கர்ப்பிணி தாய்களை உபசரிக்குத் திட்டம் | 1 | அலுவலக கர்ப்பிணி தாய்மார்கள் | - |
| 32 | பொசன் பக்தி கீதம் | 1 | பணிக் குழுவினர் | - |
| 33 | அபிவிருத்தி திட்டம் (விஹாரைகள் மற்றும் அறநெறி பாடசாலை) | 524 | | 124,061,640 |
| 34 | தங்கி இருந்து மாதாந்த ஆங்கில பாடநெறி | 1 | சாமணேர பிக்குகள் | 25,000 |
| 35 | ஹித் ஹதமு ஜவய தெமு | 1 | புலமைபரிசில் பரீட்சையில் சித்தியடையாத பிள்ளைகளுக்காக | - |
| 36 | கண் வில்லைகளை வழங்குதல் ( 18 பேருக்காக) | 1 | இப்பாகமுவ, கனேவத்த, பொல்பிதிகம, குருணாகல் பிரிவு மக்களுக்கு | - |
| 37 | மூக்கு கண்ணாடி வழங்குதல் 196 பேருக்காக<br>18 மத குருக்களுக்காக | 2 | இப்பாகமுவ பிரிவு பொது மக்களுக்கு | - |
| 38 | 02 சக்கர நாற்காலிகளை வழங்குதல் | 1 | வெல்லவ மற்றும் குருணாகல் அங்கவீனர் இருவர்களுக்காக | - |

**2.14 சமூக சேவை பிரிவு.**

இப் பிரிவினால் 2018 ஆம் ஆண்டு செயலணி கீழ் குறிப்பிட்டவாறாகும்.

| | செலவான தொகை |
|---|---|
| ❖ ஆரம்ப குழுவின் முன்னேற்ற விமர்சனம் | |
| ❖ நேரடியாக மானியம் வழங்குதல் | 101,120.00 |
| ❖ பிரதேச செயலமர்வு | 530,000.00 |
| ❖ சுயமான கூட்டங்கள் | 150,000.00 |
| ❖ வேறு | 155,000.00 |
| | 350,390.00 |
| | 1,286,590.00 |

வேறு

1. அங்கவீன ரூ.3,000 கொடுப்பனு வழங்குதல் 9,246,000
3. முதியோருக்கான கொடுப்பனவு 77,238,000
4. சிறுநீரக உதவி 735,500

216-2-3-8-1508 செலவு தலைப்பின் கீழ் கிடைக்கப் பெற்ற ஒதுக்கீடுகளினால் நிறைவேற்றப்பட்ட பணிகள்

1. மாவட்ட விளையாட்டு விழா 300,000
2. சித் ரே நிகழச்சித் திட்டம் 158,200
3. தேசிய தடகள விளையாட்டு போட்டி மற்றும் அங்கவீனர் தினக் கொண்டாட்டம் 90,500

## 2.15 அனர்த்த முகாமைத்து ஒருங்கிணைப்பு பிரிவு.

இப் பிரிவினால் 2018 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பணிகள் பிரதானமாக பல பகுதிகளாக வேறுபடுத்தி காட்டலாம்.

| தொ. இல | திட்டம்/செயற்பாடுகள் | அனுமதிக் கப்பட்ட தொகை ரூ. | நிறைவேற் றக்கட்ட திட்டங்கள் | செலவு ரூ. |
|---|---|---|---|---|
| 01 | பாடசாலை பாதுகாப்பு திட்டம் | 30,000 | 02 | 30,160 |
| 02 | வைத்தியசாலை பாதுகாப்பு திட்டம் | 31,500 | 01 | 31,560 |
| 03 | பருவ மழைக்காக முன் ஏற்பாடும் திட்டங்களை ஒழுங்கமைத்தலும் மாவட்ட கமிட்டி கூட்டம் | 21,000 | 01 | 17,160 |
| 04 | பருவ மழைக்காக முன் ஏற்பாடும் திட்டங்களை ஒழுங்கமைத்தலும் மாவட்ட கமிட்டி கூட்டம் | 129,600 | 07 | 130,360 |
| 05 | CBDRR பயிற்சியார்களை பயிற்றுவிக்கும் திட்டம் | 539,400 | 15 | 541,671 |
| 06 | பாடசாலை பாதுகாப்பின் கீழ் ஆசிரியர்களுக்கான திட்டம் | 40,000 | 01 | 40,000 |
| **கூட்டுத் தொகை** | | **791,500** | **27** | **790,911** |

### 2.12 இலங்கை தொழில்நுட்ப அபிவிருத்திச் சபை.

2018 ஆம் ஆண்டில் இப் பிரிவினால் செய்யப்பட்ட பிரதான பணிகள் கீழ் காட்டப்பட்டுள்ளது.

| தொ. இல. | நிகழ்ச்சித்திட்டம் | பௌதீக முன்னேற்றம் | நிதி ஒதுக்கீடு ரூ. |
|---|---|---|---|
| 1 | பயிற்சி திட்டம் (தொழில்நுட்ப, முகாமைத்துவம் மற்றும் நிதி) | 8 | 206,252 |
| 2 | சி.ம.தொ. கைத்தொழிலாளர்களுக்கான கடன் தெகை ஒருங்கிணைப்பு | 7 | - |
| 3 | இலகு பொறியியல் கைத்தொழிலாளர்களுக்கான உலோப் பொருட்களை வழங்குதல் | 8.18 MT | 1,598,604 |
| 4 | கித்துல் கைத்தொழிலாளர்களுக்கு கித்துல் வினைப் பொருட்களை வழங்குதல் | 85 | 31,875 |
| 5 | சி.ம.தொ. கைத்தொழிலாளர்களுக்காக உற்பத்தி திறன் அபிவிருத்தி திட்டத்தை பயிற்சி அளித்தல் | 1 | 3,000 |
| 6 | சி.ம.தொ. கைத்தொழிலாளர்களுக்காக திட்ட அறிக்கைகளை வழங்குதல் | 9 | 24,673 |
| 7 | சுயதொழிலாளர்களுக்காக உபகரணம் வழங்குதல் | 13 | 650,000 |

### a. மோட்டார் வாகன பிரிவு.

இப் பிரிவில் 2018 ஆம் ஆண்டின் பணிக் கூற்று கீழ் சுருக்கமாக காட்டப்பட்டுள்ளது.

| தொ. இல. | பணிகள் | நிறைவேற்றப்பட்ட அளவு | நிதிப் பெறுமதி (ரூ) |
|---|---|---|---|
| 01 | சாரதி பரீட்சை எழுத்து மூலம் | 42622 | - |
| 02 | சாரதி பரீட்சை செயல்முறை மூலம் | 87900 | - |
| 03 | புதிய சாரதி உரிமப்பத்திரம் வழங்குதல் | 28313 | 66,667,450 |

| | | | |
|---|---|---|---|
| 04 | சாரதி உரிமப்பத்திர திருத்தம்<br>நீடித்தல் (அபரதாத தொகையுடன்) | 2550<br>5750 | 980,900<br>10,518,450 |
| 05 | மோட்டார் வண்டி பதிவு செய்தல் | 10515 | 62,255,400 |
| 06 | வாகனங்களுக்கான இலக்கத் தகடு வழங்குதல் | 13209 | - |
| 07 | கன சான்றிதழ் வழங்குதல் | 1844 | 922,000 |
| 08 | அடையாளட்டை அட்டை வழங்குதல் | 1692 | 211,500 |
| 09 | வாகன பரிசீலனை | 461 | 115,250 |
| 10 | அரச வாகன பரிசீலனை | 344 | - |
| 11 | தடை விதிகள் | 451 | 56,375 |
| 12 | பாதை பாதுகாப்பு கமிட்டி | - | - |
| 13 | மாற்றுதல் | 2958 | 6,092,050 |
| | பிரதிகள் | 3341 | 4,722,600 |
| | செயல்முறை மற்றும் எழுத்து மூலமான பரீட்சைக்கு மீண்டும் விண்ணப்பித்தல் | 25621 | 9,789,500 |
| | புதுப்பித்தல் | 24905 | 58,531,450 |
| | **கூட்டுத் தொகை** | | **220,862,925** |

**b. அனர்த்த சலுகை சேவை மத்திய நிலையம்.**

2018 ஆண்டில் குருணாகல் மாவட்டத்தில் சலுகை நடவடிக்கைக்காக அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் தேசிய அனர்த்த சலுகை சேவை பிரிவிற்கு 1241 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீட்டைக் கொண்டு மாவட்ட செயலகத்தில் அனர்த்த சலுகை நடவடிக்கையின் கீழ் உலர் உணவுகள் வழங்கும் திட்டம் 2017/2018 செயற்படுத்தப்பட்டதுடன், குடிநீர் விநியோகிக்கும் திட்டமும் செயற்படுத்தப்பட்டது.

குருணாகல் மாவட்டத்தில் ஜனவரி மாதம் தொடக்கம் திசம்பர் மாதம் வரையில் ஏற்பட்ட வெள்ளம், சூராவளி, இடி, நிலச்சரிவு ஆகிய பலதரப்பட்ட அவசர அனர்த்த நிலைக் காரணமாக 5052 குடும்பங்களும், 17730 நபர்களும் உதவியற்ற நிலைக்கு உள்ளானர். ஆங்கு 86 வீடுகள் முழுமையாகவே பதிப்புக்குள்ளானதுடன், 1551 பகுதி பாதிப்பும், 5 மரணங்களும் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்காக 69 மில்லியன் ரூபா அளவில் ஒதுக்கீட்டினை தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தினால் மாவட்டத்திற்கு வழங்கி உதவி நடவடிக்காக வழங்கப்பட்டுள்ளது.

தேசிய அனர்த்த உதவி சேவை மத்திய நிலையத்தினால் மாவட்டத்தில் குடி நீர் தேவைக்காக நீர் தாங்கிகள் (லொரி / டிரக்டர்) 50 உம், நீர் தாங்கி 1255 உம், 2018 ஆம் ஆண்டு வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி 2018 ஆம் ஆண்டில் முன்னேற்ற கலந்தாலசனை கூட்டம், பயிற்சி திட்டங்கள், அறிவுறுத்தும் திட்டம் செயற்படுத்தப்பட்டதுடன், அதற்கு மேலதிகமாக பிரதேச ரீதியாக அனர்த்த சலுகை சேவை முன்னேற்பாடு திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

**c. உள்ளக கணக்காய்வு பிரிவு.**

கணக்கு கொடுக்கு உத்தியோகத்தரினால் நி.ச. 128(1) இல் காட்டப்பட்டுள்ள சொந்த கடமை மற்றும் பொறுப்பு நிறைவேற்றுவதற்காக நி.ச. 135 கீழ் மாவட்ட செயலகத்தில் மற்றும் மாவட்ட செயலகத்தில் உள்ளடங்கியுள்ள 30 பிரதேச செயலகங்களினதும் நிதிச் சட்டத்தில் காட்டப்பட்டுள்ளவாறு நிதி நடவடிக்கை, அபிவிருத்தி நடவடிக்கை, நிர்வாக விவகாரங்களில் உரிய பிரிவுகள் அரச கொள்கைகளுக்கு அமைய செயற்படுகின்றதா என்று பரிசீலித்தல் மற்றும் பரிசீலனைக்கு உட்படுத்துவதனால் வெளிப்படுத்தப்பட்ட பிழைகள், மோசடி, குறைபாடுகள் பற்றி கணக்கு கொடுக்கும் உத்தியோகத்தருக்கு அறிக்கை சமர்பித்தல் மற்றும் அது பற்றி எடுக்கப்பட வேண்டிய

வழி வகைகளை தெளிவுபடுத்தி மாவட்ட செயலகம் மற்றும் உரிய பிரதேச செயலகங்களை அறிவுறுத்தல் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் பொது பணிப் பொறுப்பாகும்.

இங்கு அரசின் தாபனக் கோவை, அரசின் நிதிக் கோட்பாடு, கொள்முதல் வழிகாட்டல் கோவை, உள்நாட்டலுவல்கள் அமைச்சு, அரச நிர்வாக அமைச்சு, திறைச்சேறி மற்றும் வேறு அமைச்சுக்கள், திணைக்களங்களினால் வெளியிடப்பட்டுள்ள ஆலோசனைப்படி நடவடிக்கை மேற்கொண்டு உடமைகள் மற்றும் சொத்துக்களை பாதுகாப்பாக சிக்கனத்துடன் முறையாக உபயோகித்து வீண்விரயத்தினை குறைத்து உத்தியோகத்தர்கள் மற்றும் பௌதிக வளத்தை கையாளுதலும் அமைப்புக்கள் நிர்வாகத்தில் குறைபாடுகளை மேம்படுத்தலே எதிர்பார்ப்பாகும்.

அதன்படி 2017 ஆம் ஆண்டினுள் செய்யப்பட்ட செயற்பாடுக்ள பற்றிய விபரம் கீழ் குறிப்பிடப்பட்டவாறாகும்.

| பணி | பணிப் பொறுப்பு பற்றிய விபரம் |
|---|---|
| 01. வவுச்சர்களை பரிசீலித்தல் | 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2018 ஆம் ஆண்டு ஒக்தொம்பர் 31 ஆந் திகதி வரை மாவட்ட செயலகம் மற்றும் 30 பிரதேச செயலகளில் செலுத்தப்பட்ட வவுச்சர்கள் பற்றி பரிசீலித்தல் மற்றும் அதற்காக கணக்காய்வு அறிக்கை சமர்பித்தல் |
| 02. அலுவலக பரிசீலனை | மாவட்ட செயலகம் மற்றும் 30 பிரதேச செயலகங்களினை பரிசீலித்தல் மற்றும் அதற்குரிய கணக்காய்வு அறிக்கையினை ஒழுங்கமைத்து உரிய அலுவலகங்களுக்கு சமர்பித்தல் |
| 03. பிரதேச செயலகளில் கணனி கட்டுபட்டினை மேம்படுத்தல். | அறிமுகம் செய்துக் கொண்ட துறைகளுக்குரிய விசேட ஆலோசனை வழங்குதல். கணக்காய்வு சந்தர்ப்பங்களில் பலதரப்பட்ட அறிவூட்டல்கள் மற்றும் அமைப்பினுள் உளள பிரச்சினைகளை அடையாளம் காணுவதனால் அமைப்பினை மேம்படுத்தல் நடவடிக்கையினை மேற்கொள்ளல் |
| 04. கணக்காய்வு முகாமைத்துவ குழு நடாத்துதல் | தவணைப்படுத்தி மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் அனைத்தும் பிரதிநித்துவப்படுத்துமாறு 2018 ஆம் ஆண்டு கணக்காய்வு முகாமைத்துவ கமிட்டி 04 நடாத்தப்பட்டதுடன், பிரதேச செயலகங்களில் நடாத்தப்பட்ட கணக்காய்வு கமிட்டிக்காக கிடைக்கின்ற சந்தர்ப்பப்படி பிரதாக உள்ளக கணக்காயவாளர் கலந்துக் கொள்ளல். |
| 05. விசேடமாக அடையாளம் காணப்பட்ட பிரச்சினை பற்றி சட்டரீதியான அறிவுறுத்தல்கள் மற்றும் ஆலோசனை வழங்குதல் | பதவித் தடை, பதவியினை கைவிட்ட, இறந்த உத்தியோகத்தர்கள், ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களடத்தில் இருந்து அரசிற்கு பெற்றுக் கொள்ள வேண்டிய நிலுவை கடன் மீதியினை அறவிடுவதற்கு தேவையான ஆலோசனை வழங்குதல் |
| | தீர்வு செய்யப்படாத சென்ற ஆண்டுகளில் பொது வைப்புத் தொகை பற்றி தேடிப்பார்த்து நடவடிக்கை மேற்கொள்ளல். உரிய துறையினை உடைய உத்தியோகத்தர்களுக்காக மோட்டார் சைக்கிள் வழங்குதல் மற்றும் வங்கி சமரச நடவடிக்கை பற்றி கவனத்தினை செலுத்தி பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்கு ஆலோசனை வழங்குதல். |
| 06. ஓய்வூதியம் பற்றிய நடவடிக்கை | ஓய்வூதிய நடவடிக்கை பற்றிய வாழ்கின்றது பற்றிய சான்றிதல் கோவையில் இல்லாதிருத்தல், வேறு ஒருவரினால் ஓய்வூதியத்தை பெற்றுக் கொள்ளுதல் பற்றி பரிசீலித்தல் மற்றும் 01/2017 உள்ளக கணக்காய்வு சுற்றுநிருபப்படி ஓய்வூதிய நடவடிக்கை நடைபெறுகின்றதா என்பது பற்றி தேடிப்பார்த்தல் மற்றும் தவணைப்படுத்தப்பட்ட மாவட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்து கமிட்டியில் இவ் விடயம் பற்றி கலந்தாலோசித்தல். |
| 07. வாகன பராமரிப்பு | வாகன பராமரிப்பு நடவடிக்கையின் போது ஏற்படுகின்ற குறைபாடுகள் பிழைகளை அடையாளம் கண்டு நிருவாக பிரிவு மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட வாகன பராமரிப்பு பற்றி 2018 ஆம் ஆண்டில் எல்லா உத்தியோகத்தர்களையும் அறிவுறுத்தும் பயிற்சி திட்டங்கள் பிரதான உள்ளக கணக்காய்வாளரினால் நடாத்துதல் |

## 1.20 பொறியியலாளர் பிரிவு.

2018 ஆண்டு முழுவதும் பொறியியல் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட பிரதான பொறுப்புக்கள் மற்றும் சேவைகள் கீழ் காட்டப்பட்டுள்ளவாறாகும்.

01. குருணாகல் மாவட்ட செயலகத்தில் மற்றும் பிரதேச செயலகங்களில் புதிய கட்டமைப்பிற்காக திட்டமிடல் மற்றும் மதிப்பீடு ஒழுங்கமைத்தல்.
02. குருணாகல் மாவட்டத்தினுள் அமைச்சுக்கள் / நிறுவனங்களினால் நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்களுக்காக திட்டமிடல் மற்றும் மதிப்பீடு ஒழுங்கமைத்தல்.
03. குருணாகல் மாவட்ட செயலகத்திற்கு உரிய கட்டிடங்களை பராமரித்தல், பழுதுபார்த்தல் மற்றும் சேவைகைகளை கொண்டு நடாத்தல்.
04. அபிவிருத்தி திட்டத்திற்காக பிரதேசச செயலகங்களினால் ஒழுங்கமைக்கப்பட்ட மதிப்பீடுகளை பரிசீலித்தல் மற்றும் அனுமதிக்காக சமர்பித்தல்.
05. கட்டமைப்பிற்காக பெறுகை ஏற்பாடு ஆவணங்களை ஒழுங்கமைத்தல்.
06. பிரதேச செயலகங்களில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்காக தேவையான தொழில்நுட்ப உதவியினை வழங்குதல்.
07. எல்லா வேலைத்தளங்களையும் பரிசீலித்தல், கணக்கு பெற்றுக் ொள்ளல், அளவைகளை பெற்றுக் கொள்ளல், பில்பத்திரங்களை பரிசீலித்தல் மற்றும் சிபாரிசு சமர்பித்தல் மற்றும் கொடுப்பனவு வவுச்சர்களை ஒழுங்கமைத்தல்.
08. சகல கட்டமைப்புகளதும் முன்னேற்ற அறிக்கையினையும் பகுப்பாய்வு செய்தல் மற்றும் முன்னேற்றத்தை பரிசீலனை செய்தல்.
09. மாவட்டத்தினுள் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்கள் பற்றி தீவிரமாக கருத்து சமர்பித்து பரிந்துரை சமர்பித்தல், கூட்டத்தை நடாத்துதல் / பங்கேற்றல்.
10. கட்டமைப்பிற்காக பொறியியல் தர அறிக்கைகளை சமர்பித்தல்.
11. தொழில்நுட்ப கமிட்டி பிரதிநிதித்துவப்படுத்தல்.

கட்டமைப்பு விடய கட்டிடங்களை கட்டமைத்தல் மற்றும் பணி மனை பழுதுபார்ப்பு செய்வதாக உப விடயங்கள் இரண்டின் கீழ் நிறைவேற்றப்படும்.
2018 ஆம் ஆண்டினுள் நிறைவேற்றப்பட்ட கட்டமைப்பு மற்றும் பழுதுபார்ப்பு செய்யப்பட்ட திட்டங்கள்

| | திட்டத்தின் பெயர் | மொத்த ஒதுக்கீடு | ஒப்பந்தத் தொகை |
|---|---|---|---|
| **சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தியானி சமய நடவடிக்கை அமைச்சு (சுற்றுலா அபிவிருத்தி திட்ட கருத்து – 2018)** | | | |
| 1 | ரம்படகல்ல மொணராகல விஹாரையில் சுற்றுலா வசதிகளை மேம்படுத்தல் | 16,509,222.93 | 11,835,289.80 |
| 2 | பாதெனிய நகரத்தில் ஓய்வு கூடம் மற்றும் ஹரித அருணலு திட்டம் | 3,126,896.07 | 3,126,896.07 |
| 3 | கட்டிமஹன சாந்த ஆனா தேவலாயத்தில் ஓய்வு கூடத்தை கட்டமைத்தல் | 21,721,701.82 | 15,296,886.60 |
| **மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு (மகிழ்வான நகரம் - சிறிய நகர அபிவிருத்தி திட்டம் - 2018)** | | | |
| 4 | யக்கல சந்தி அயேசா தோட்டம் பலநோக்கு கட்டிடத்தை கட்டமைத்தல் | 3,802,864.26 | 2,465,890.00 |
| 5 | பானகமுவ மிரிஸ்சல வழி 05 ஆம் வலைவு தொடக்கம் மிரிஸ்சல வரையிலான பாதையினை அபிவிருத்தி செய்தல். | 3,500,000.00 | 3,409,255.54 |
| **மகளிர் மற்றும் சிறுவர் நடவடிக்கை அமைச்சு (சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் மகளிர் வன்முறையை தடுக்கும் திட்டம்)** | | | |
| 6 | பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தை அமைத்தல் - ஹெட்டிபொல | 5,631,751.84 | 4,468,292.69 |
| 7 | பொலிஸ் மற்றும் மகளிர் பணிகத்தை அமைத்தல் - குளியாப்பிடிய | 6,019,279.84 | 4,974,006.30 |

| | | | |
|---|---|---|---|
| **விளையாட்டு அமைச்ச (கிராம விளையாட்டு மைதானத்தை மேம்படுத்தும் திட்டம் - 2018)** | | | |
| **8** | கொழும்பகம செயல்பாட்டரையினை கட்டமைத்தல் | 7,940,374.50 | 5,388,261.97 |
| **9** | L.B.ஜயசேன விளையாட்டரங்கின் செயல்பாட்டரையினை கட்டமைத்தல் | 7,940,374.50 | 5,643,852.09 |
| **விளையாட்டு மைதானத்தினை மேம்படுத்தல் - தொடர்ந்துள்ள திட்டம்** | | | |
| **10** | வடமேல் பல்கலைக்கழகத்தின் அருகில் கனதுல்ல குளத்தை சுற்றி நடைப்பயிற்சி நடைபாதைகளை நிர்மாணித்தல். | 4,034,099.25 | 3,878,938.98 |
| **11** | கடுபொத கடஹபொல பொல்பிடிய குளத்தின் அருகில் நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள நடைபயிற்சி நடைபாதை | 5,784,777.43 | 5,983,305.00 |
| **12** | பிங்கிரிய உடல்நல மத்திய நிலையத்தை நிர்மாணித்தல் | 6,782,192.57 | 6,867,874.80 |
| **உள்ளக நடவடிக்கை மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சு (வடமேல் அபிவிருத்தி திட்டம்)** | | | |
| **13** | மெரிடேல் தோட்டத்திற்கு செல்கின்ற சமங்கி உயன பாதையினை கொன்கிறீட் இடப்பட்டுள்ள இடத்திலிருந்து திரு மங்கல சூரியபண்டார அவர்களது வீடு வரையிலான பகுதியினை கொன்கிறீட் இடல் | 2,755,712.97 | 2,332,729.60 |
| **பௌத்த நடவடிக்கை அமைச்சு (புராதன விஹாரையினை மறுசீரமைப்பு மற்றும் புனரமைப்பு செய்தல் - 2018)** | | | |
| **14** | நெல்லிகல ரஜமஹா விஹாரையில் மின்னல் கம்பியினை பொறுத்துதல் | 1,602,000.00 | 1,365,800.00 |
| **பிரதேச அபிவிருத்தி திட்டம்** | | | |
| **15** | தல்கஹபிடிய ஜுபிலி மாவத்தையில் திரு ஜயசுமன அவர்களது வீட்டின் அருகில் தொடங்கி திரு எஸ்.எச். சுனில் ஹேவகே வர்களது வீடு வரையிலான பாதைக்கு தார் ஊற்றுதல் | 2,541,120.28 | 2,282,929.00 |
| **தேசிய கொள்கை மற்றும் பொருளாதார நடவடிக்கை அமைச்சு – கிராமீய உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி விசேட திட்டம்** | | | |
| **16** | யாப்பஹுவ இராஜதானத்திற்கு உரிய தொல்பொருளியல் கல்லறை மையவாடிக்கு நுழை வாயில் பாதையினை திருத்துதல் (இரண்டாவது கட்டம்) – 01 கட்டம் | 20,309,300.00 | 19,552,835.08 |
| **17** | யாப்பஹுவ இராஜதானியிற்கு உரிய தொல்பொருளியல் கல் கல்லறைகள் இடுகாட்டிற்கு செல்கின்ற பாதையினை புனரமைத்தல் (இரண்டாவது கட்டம்) 02 கட்டம் | 22,036,700.00 | 21,212,700.16 |
| **18** | மாவத்தகம கஹபத்வல ஈரியமின்ன பாதையின் வேலைகளை முடிவுறுத்தல்(2.000-3.350 Km) - 2 கட்டம் | 38,114,000.00 | 35,452,728.79 |
| **19** | மாவத்தகம கஹபத்வல ஈரிமின்ன பாதையில் வேலைகளை முடிவுறுத்தல் (0.480-2.000 Km)- 1 கட்டம் | 47,826,000.00 | 44,535,426.42 |
| **20** | இஹலகம சந்தியில் இருந்து நிகவெவ வரையிலான பாதைக்கு தார் இட்டு அபிவிருத்தி செய்தல் கட்டம் 1 | 50,000,000.00 | 48,145,291.43 |
| **21** | நிகவெவ தொடக்கம் கல்கடவல பாடசாலை அருகில் வரையிலான பாதைக்கு தார் இட்டு அபிவிருத்தி செய்தல் கட்டம் 2 | 50,000,000.00 | 48,145,291.43 |
| **22** | கல்கடவல பாடசாலை அருகில் இருந்து கீனவ பன்சல் சந்தி முடிவு வரையிலான பாதையை அபிவிருத்தி செய்தல் (இஹலகம சந்தி தொடக்கம் நிகவெவ பாதை – கட்டம் 3) | 50,000,000.00 | 47,977,518.21 |
| **23** | ரிதீ விஹாரைக்கு செல்கின்ற பாதையினை புனரமைத்தல் - 1 ஆம் கட்டம் | 6,868,691.46 | 6,421,052.00 |
| **24** | ரிதீ விஹாரைக்கு செல்கின்ற பாதையினை புனரமைத்தல் 2 ஆம் கட்டம் | 25,000,000.00 | 23,461,918.20 |
| **25** | ரிதீ விஹாரைக்கு செல்கின்ற பாதையினை புனரமைத்தல் 3 ஆம் கட்டம் | 25,000,000.00 | 24,093,596.68 |
| **26** | மாஹொலவ – எளிபிச்சிய பாதைக்கு தார் இட்டு புனரமைத்தல் | 4,219,000.00 | 4,177,169.66 |
| **27** | மாஹொலவ – பரகஹயாய பாதைக்கு தார் இட்டு புனரமைத்தல் | 2,781,000.00 | 2,755,117.87 |

| | | | |
|---|---|---|---|
| **28** | இப்பாவல தொடக்கம் குருணாகல் புத்தளம் ஏ 10 பாதையில் நிக்கவெரடிய பொலிஸ் நிலையத்தின் அருகில் மத்திய கால்வாய் பாதைக்கு தார் இட்டு புனரமைத்தல் | 35,315,000.00 | 34,076,657.59 |
| **உள்நாட்டலுவல்கள் அமைச்சு** | | | |
| **29** | இப்பாகமுவ கேட்போர் கூடத்தில் மலசல கூடங்களை கட்டமைத்தல் | | 1,450,993.32 |
| **30** | இப்பாகமுவ கேட்போர் கூடத்தில் திறைச் சீலை இடல் | 10,000,000.00 | 1,825,000.00 |
| **31** | இப்பாகமுவ கோட்போர் கூடத்திற்காக இருக்கைகளை பொறுத்துதல் | | 625,600.00 |
| **உள்நாட்டலுவல்கள் அமைச்சு – தொடர்ச்சி** | | | |
| **32** | மாவத்தகம பி.செ. மூன்று மாடி கட்டிடத்தை கட்டமைத்தல் | 50,000,000.00 | 61,515,124.12 |
| **கிராம உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி விசேட திட்டம் 2017 தொடர்ச்சி** | | | |
| **33** | கணன்கமுவ எரிபொருள் நிரபத்திலிருந்து கோந்துருவாபொல ஊடாக பெமிணிகல்ல வரையிலான பாதையை காபட் இடல் - குளி-கிழக்கு – கட்டம் I | 37,709,748.09 | 37,571,970.00 |
| **34** | கணன்கமுவ எரிபொருள் நிரபத்திலிருந்து கோந்துருவாபொல ஊடாக பெமிணிகல்ல வரையிலான பாதையை காபட் இடல் - குளி-கிழக்கு – கட்டம் II | 53,607,024.27 | 42,046,565.00 |
| **35** | இலுக்ஹேன சந்தி தொடக்கம் பேருவெவ பாதையை மேம்படுத்தல் - குளி- மேற்கு | 28,234,880.04 | 27,463,440.36 |
| **36** | எம்பவ பாடசாலை அருகிலிருந்து வெலிகரிவத்த தொடக்கம் நரி சந்தி வரையிலான பாதையை காபட் இடல் - குளி – மேற்கு | 27,142,585.20 | 20,329,844.00 |
| **37** | எம்பவ பாடசாலை அருகில் தொடங்கி வேலிகரிவத்த வரை நரி சந்தி வரையிலான பாதை (1+327 to 1+466 RHS) පැති பக்க சுவர் கட்டமைத்தல் | | 2,882,610.00 |
| **கிராமீய உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி திட்டம் - 2017 கமநல அபிவிருத்தி திணைக்களம்** | | | |
| **38** | பொல்பிதிகம கொஸ்கொடகொலல குளத்தை புனரமைத்தல் | 5,000,000.00 | 4,854,235.15 |

**கட்டிமஹன சாந்த ஆனா தேவாலயத்தின் ஓய்வுகூடத்தினை கட்டமைத்தல்.**





**ரம்படகல்ல மொணராகல விஹாரையில் சுற்றுலா வசதியினை மேம்படுத்தல்.**





**மாவத்தகம பி.செ. மூன்று மாடி கட்டிடத்தை கட்டமைத்தல்.**





**ரிதீ விஹாரைக்கு செல்லும் பாதையை புனரமைத்தல் - 1 கட்டம்**





இன்னும் 20 லட்சத்திற்கு மேற்பட்ட பெறுமதியுடன் பிரதேச செயலங்களில் உள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர்களினால் ஒழுங்கமைக்கப்பட்ட மதிபீட்டிற்காக மாவட்ட பொறியியலாளரின் பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது.

**d. தொழில் சேவை மத்திய நிலையம்.**

| தொ. இலக் | நிகழ்ச்சித்திட்டம் | ஆண்டு முன்னேற்றம் | ஒதுக்கீடு (ரூபா) |
|---|---|---|---|
| 01 | தொழில் எதிர்பார்பாளர்களை பதிவு செய்தல் | 2205 | - |
| 02 | தனியார் பிரிவு நிறுவனங்களினால் வெற்றிடமுள்ள தொழில்களுக்கு தொழில் வழங்குதல் | 2223 | - |
| 03 | தொழில் வெற்றிடத்திற்காக தொழில் எதிர்பார்பாளர்களை அனுப்புதல் | 2826 | - |
| 04 | பயிற்சியினை எதிர்பார்பாளர்களை பயிற்சி நிறுவனங்களுக்கு அனுப்புதல் | 77 | - |
| 05 | தொழில் எதிர்பார்பாளர்களை தொழில் வாய்ப்பளித்தல் | 511 | - |
| 06 | கொள்கை மேம்பாடு மற்றும் தொழிளில் ஈடுபடுத்தும் திட்டத்தை நடாத்துதல் | 07 | 35,000 |
| 07 | தொழில் சந்தை திட்டத்தை நடாத்துதல் | 05 | - |
| 08 | தொழில் சவாலகளை வெற்றிக் கொள்ளல் | 22 | - |
| 09 | பட்டதாரி நிகழ்ச்சித்திட்டம் | 01 | 34,450 |
| 10 | ஆசிரியர்களை அறிவுறுத்தல் | 01 | 27,700 |

**e. விவசாய பிரிவு.**

2018 ஆம் ஆண்டில் குருணாகல் மாவட்டத்தில் விவசாய அபிவிருத்தி நடவடிக்கைக்காக ஜனாதிபதி செயலகத்தினால் 9.55 மில்லியன் ரூபா தொகையும், விவசாய திணைக்களத்தினால் 3.74 மில்லியன் ரூபா தொகையும், வழங்கப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீட்டினை பயன்படுத்தி மாவட்ட செயலகத்தில் விவசாய பிரிவினால் 2018/19 பெரும்போக மேலதிக உணவு பயிர்களை விவசாயம் செய்யும் திட்டம், மிளகாய் விவசாயிகளுக்காக பொலிதின் உறை வழங்கும் திட்டம், புதிய ஹரித கலாச்சாரத்தினால் 2020 ஆம் ஆண்டின் போது இலங்கையில் காடுகள் 1% னால் அதிகரிக்கும் வழிகாட்டி திட்டம், பேண்தகு பாடசாலை திட்டம் மற்றும் கெவென்டிஸ் திசு வாழை தாவரங்களை வளதர்ப்பதற்காக இலவசமாக வழங்கும் திட்டங்களை செயற்படுத்தப்பட்டது.

தகுந்த பயனாளிகளை பிரதேச செயலக பிரிவு ரீதியாக தேர்ந்தெடுத்து இந்த திட்டத்தை ஒருங்கிணைக்கும் நடவடிக்கையினை விவசாய மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

மாவட்டத்தில் விவசாய அபிவிருத்திக்காக தேவையான தகவல்கள் மற்றும் தரவுகள் பிரதேச விவசாய கமிட்டி ஊடாக பெற்றுக் கொண்டு தகவல்களை மாவட்ட விவசாயத் தொழிலுக்கு உரிய மற்றைய எல்லா நிறுவனங்கள் மற்றும் ஒருங்கிணைத்து மாவட்ட விவசாய கமிட்டியை நடாத்தப்பட்டதுடன், அதனால் மாவட்டத்தில் விவசாய நடவடிக்கைகளுக்கு உரிய தீர்மானம் மற்றும் திட்டங்களை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

| செயற்திட்டம் | ஒதுக்கப்பட்ட தொகை ரூ. | நிதி முன்னேற்றம் ரூ. | இயற்பியல் முன்னேற்றம் |
|---|---|---|---|
| 01. உணவு தயாரித்தல் தேசிய திட்டத்தின் கீழ் 2018/19 பெரும்போகத்தில் மேலதிக உயவு பயிர்களை விவசாயம் செய்தல் (50% விவசாயிகளின் பங்களிப்புடன்) | **3.43** | **3.38** | குருணாகல் மாவட்டத்தில் கல்கமுவ, கிரிபாவ, எஹடுவெவ, நிகவெரடிய, அம்பன்பொல, பொல்பிதிகம, இப்பாகமுவ, பிங்கிரிய, மஹவ, கொடவெஹெர, ரஸ்நாயக்கபுர, வாரியபொல, ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் பயனாளிகள் 775 பேருக்காக நிலக்கடலை கி.கிராம் 17,340.0 உம், (ஏக்கர் 433.5 காக), பயனாளிகள் 238 பேருக்காக கௌபி – கி.கிராம் 644.0 உம், (ஏக்கர் 53.67 காக), பயனாளிகள் 224 பேருக்காக, பயறு - கி.கிராம் 673 உம் (ஏக்கர் 67.3 காக) வழங்கப்பட்டுள்ளது. இந்த பயிர்கள் உரிய துறையில் . இந்த விதைகளை உரிய இடத்தில் களஞ்சியப்படுத்தி உள்ளதுடன், சில பிரதேசங்களில் அறுவடை செய்ய ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| 02. மிளகாய் விவசாயம் செய்பவர்களுக்காக பொலிதீன் உறைகளை வழங்கும் திட்டம் (50% விவசாயிகளின் பங்களிப்பு மூலம்) | **2.00** | **2.00** | குருணாகல் மாவட்டத்தில் கிரிபாவ, கல்கமுவ, இப்பாகமுவ, அம்பன்பொல, ரஸ்நாயக்கபுர, மஹவ, உடுபத்தாவ, பண்டுவஸ்நுவர கிழக்கு, பண்டுவஸ்நுவர கிழக்கு, குளியாப்பிடிய கிழக்கு, குளியாப்பிடிய மேற்கு, பமுணாகொடுவ, கனேவத்த, மாஸ்பொத, மல்லவபிடிய, மாவத்தகம, பொல்கஹவெல, நாரம்மல, பிங்கிரிய, கொடவெஹெர, நிக்கவரடிய உட்பட பிரதேச செயலக பிரிவுகள் 22 ஆகும். |
| 03.புதிய ஹரித கலாச்சாரம் மூலம் 2020 ஆம் ஆண்டு ஆகும் போது இலங்கையில் 1% னால் காடுகள் அதிகரிக்கும் கொண்டு நடாத்தும் திட்டம் | **1.58** | **1.57** | இப்பாகமுவ, ரிதீகம, கனேவத்த, குளியாப்பிடிய, உடுபத்தாவ, ஹொரொம்பாவ, பிங்கிரிய, குருணாகல், மஹவ, பொல்பிதிகம, கல்கமுவ, கிரிபாவ, வாரியபொல, பண்டுவஸ்நுவர, வாரியபொல, கிரிஉள்ள, பன்னல, அலவ்வ ஆகிய கோட்டா கல்வி அலுவலகங்கிளினுள் |
| 04.பேன்தகு பாடசாலை திட்டம் | **2.54** | **2.54** | குருணாகல் மாவட்டத்தில் வலய கல்வி அலுவலங்கள் இப்பாகமுவ, குளியாப்பிடிய, மஹவ, குருணாகல் வாரியபொல, கிரிஉள்ள |
| 05 . கெவென்டிஸ் திசு வளர்த்தல் வாழை கன்றுக்ள 37,500 இனை 50 ஏக்கருக்காக வழங்குதல் (இலவசமாக) | **3.74** | **3.74** | மஹவ பிரிவினுள் செயற்படுத்தப்பட்டதுடன், கன்றுகளை களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. |
| **மொத்த கூட்டுத் தொகை** | **13.29** | **13.24** | |

**நிலக் கடலை சாகுபடி**





**f. மாவட்ட காணி பயன்பாடு பிரிவு.**

| தொடர் இலக்கம் | செயற்திட்டம் | திட்டங்களின் எண்ணிக்கை | ஒதுக்கப்பட்ட தொகை (ரூ | செலவிடப்பட்ட ஒதுக்கீடு (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | பேண்தகு நிலப்பரப்பினை உபயோகப்படுத்தலினை உறுதிப்படுத்துவதற்காக கிராம வாரியாக காணி பாயன்பாடு திட்டத்தை ஒழுங்கமைத்தல் | 22 | 506,000 | 505,813 |
| 2 | கலந்துக் கொள்ளும் பிரவேசம் மூலம் நுண்ணீர்பாசன பிரதேசங்களில் உள்ள நிலங்களின் பயன்பாட்டினை திட்டமிடல் | 6 | 138,000 | 138,000 |
| 3 | மண் மற்றும் நீரினை பாதுகாத்தல் மூலம் விவசாய நிலங்களின் குறைந்த பயன்பாட்டினை உற்பத்தித் திறன் மூலம் மேம்படுத்துதல் | 4 | 348,000 | 348,000 |
| 4 | விசேட கல்வி | 3 | 150,000 | 147,812 |
| 5 | மாவட்ட காணி பயன்பாடு கமிட்டி | 5 | 11,000 | 11,000 |
| 6 | பிரதேச காணி பயன்பாடு கமிட்டி | 28 | 58,250 | 58,230 |
| 7 | காணி பயன்பாட்டுத் திட்டம் பற்றிய அறிவுறுத்தல் | 15 | 45,000 | 45,000 |
| | **கூட்டுத் தொகை** | **81** | **1,256,250** | **1,253,855** |

**g. சிறுவர் பாதுகாப்பு பிரிவு.**

2018 ஆண்டினுள் இப் பிரிவினால் செய்யப்பட்ட பணிகள் கீழ் காட்டப்பட்டுள்ளது.

| தொ. இல | நிகழ்ச்சித்திட்டம் | ஒதுக்கீடு அளவு | செலவான தொகை |
|---|---|---|---|
| 1 | தொழில் புரிகின்ற சிறுவர்களுக்கு எதிராக சர்வதேச தினத்தை நினைவுகூறும் திட்டம் | ரூ. 50,000.00 | ரூ.47,149.02 |
| 2 | பாடசாலை சிறுவர் பாதுகாப்பு கமிட்டி அமைக்கும் திட்டம் | ரூ.54,000.00 | ரூ.53,995.00 |
| 3 | பெண் பிள்ளைகளின் தினத்தை நினைவு கூறுவதை இட்டு தோட்ட மக்களை அறிவுறுத்தும் திட்டம் | ரூ.50,000.00 | ரூ. 48,300.00 |
| 4 | குறைந்த வயதில் கர்ப்பமாவதை குறைப்பதற்கான திட்டம் | ரூ.50,000.00 | ரூ.50,000.00 |
| 5 | சிறுவர் மனைகளை மேற்பார்வை செய்யும் திட்டம் | ரூ.25,600.00 | ரூ.25,600.00 |
| 6 | பிரதேச உத்தியோகத்தர்களது மாதாந்த முன்னேற்றத்தை பரிசீலிக்கும் கூட்டத்தை நடாத்துதல் | முதலாம் தவணை ரூ.24,300.00<br>இரண்டாம் தவணை ரூ.15,000.00 | ரூ. 22,370.00<br>ரூ. 14,750.00 |
| 7 | உலக சிறுவர் தினத்தை கொண்டாடுதல் | ரூ. 192,000.00 | ரூ.186,740.00 |
| 8 | கல்வியல் கல்லூரி ஆசிரிய மாணவர்களி விழிப்புணர்வூட்டும் திட்டம் | ரூ. 150,250.00 | ரூ.150,250.00 |
| | **மொத்த தொகை** | **ரூ. 611,150.00** | **ரூ. 599,154.02** |

**h. மகளிர் அபிவிருத்தி பிரிவு.**

| தொ. இலக் | செயற்திட்டம் | கலந்துக் கொண்டவர்களின் எண்ணிக்கை | செலவு ரூ |
|---|---|---|---|
| 1 | தொழில் முனையும் பெண்களது தயாரிப்புக்களின் குணநலம் அடைத்தல் மற்றும் அடையாளங்களை (லேபல்) இடல் பற்றிய நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துதல் | 40 | 13,500 |
| 2 | தொழில் முனையும் பெண்களது தயாரிப்புக்களின் குணநலத்தை மேம்படுத்துவதற்கு தேவையான உபகரணங்களை விலைக்கு வாங்குதல் | 6 | 15,000 |
| 3 | ஆண் பெண் சமூக அடிப்படையில் ஏற்படுகின்ற வன்முறையினை தடுப்பதற்காக 1 ஆம் நிகழ்ச்சித்திட்டம் நடாத்துதல் | 200 | 126,000 |
| 4 | ஆண் பெண் சமூக அடிப்படையில் ஏற்படுகின்ற வன்முறையினை தடுப்பதற்காக 2 ஆம் நிகழ்ச்சித்திட்டம் நடாத்துதல் | 100 | 78,000 |
| 5 | மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களது மற்றும் ஆலோசனை உத்தியோகத்தர்களது விமர்கனக் கூட்டத்தை நடாத்துதல் | 60 | 23,100 |
| 6 | மாவட்ட முன்னேற்ற விமர்சனக் கூட்டத்தை நடாத்துதல் | 165 | 59,750 |

### i. காணி பிரிவு.

மாவட்டத்தினுள் காணப்படுகின்ற காணிப் பிரச்சினை பற்றி பொதுமக்களிடத்தில் இருந்து கிடைக்கும் கோரிக்கை மற்றும் முறைப்பாடுகளை தீர்ப்பதற்காக முன்னிற்றல், மாவட்டத்தினுள் அரச காணிகளின் முகாமைத்துவத்தின் முக்கிய தலையீட்டாளராக நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் மாவட்டத்தினுள் ஏற்படுகின்ற பிரச்சினை பற்றி செயற்படுதல் காணிப் பிரிவின் பிரதான செயற்பாடாகும்.

| தொ. இலக்கம் | நோக்கம் | கிடைத்த கடிதங்கள் | வேலை முடிந்த |
|---|---|---|---|
| 01 | பிரதேச செயலக பிரிவுகளுக்கு உரிய காணிகள் பற்றி கிடைக்கப் பெறுகின்ற மக்கள் முறைபாடுகளை பொறுப்பேற்றல், அறிக்கை ஒழுங்கமைத்தல், அறிக்கைப்படி உகந்த விசாரணை நடாத்துதல் (குறைந்த பட்சம் சேவை சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்தினுள் உரிய சேவைகளை வழங்குதல்) | 294 | 294 |
| 02 | காணிகள் பற்றிய அமைச்சு, ஜனாதிபதி அலுவலகம், உள்நாட்டலுவல்கள் காணி அமைச்சு மற்றும் ஒம்புட்ஸ்மன் அலுவலகத்தினால் கிடைக்கின்ற கடிதங்கள் பற்றிய அறிக்கை கோரல் மற்றும் விசாரணை நடாத்துதல் (குறைந்த பட்சம் சேவை சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்தினுள் உரிய சேவையினை வழங்குதல்) | 50 | 50 |
| 03 | பிலா மரங்களை வெட்டுதல் பற்றி கிடைக்கின்ற விண்ணப்பப் படிவங்களுக்காக அனுமதிக் கிடைத்த பின்பு உரிமப்பத்திரம் வழங்குதல், (குறைந்த பட்சம் சேவை சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்தினுள் உரிய சேவையினை வழங்குதல்) | 214 | 214 |
| 04 | ஜனாதிபதி செயற் பணி படை மூலம் செயற்படுத்தப்படுகின்ற சுற்றாடல் குழுவினை அழைத்தல், ஒருங்கிணைப்பு மற்றும் அறிக்கை ஒழுங்கமைத்தல் (குறைந்த பட்சம் சேவை சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்தினுள் உரிய சேவையினை வழங்குதல்) | 5 | 5 |
| 05 | மரம் வெட்டுதல் பற்றி கிடைக்கப் பெறுகின்ற பொது மக்களின் முறைபாடு மற்றும் அரசிற்கு சொந்தமான காணிகளில் மரம் வெட்டுதல் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல் (குறைந்த பட்சம் சேவை சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்தினுள் உரிய சேவையினை வழங்குதல்) | 64 | 64 |
| 06 | அறுவடைக்காகன கூட்டம் நடாத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளல் | வியாபார (14) | 14 |
| 07 | யானை வராதிருப்பதற்காக வேலை கட்டுதல் பற்றிய கூட்டத்தை நடாத்துதல் | 5 | 5 |
| 08 | தெதுரு ஓய நீர்த்தேக்க திட்டம் மற்றும் மதிய அதிவேக பாதைகளை கட்டமைக்கும் திட்டம் பற்றி காணிகளை கைப்பற்றுதல் மற்றும் நட்டஈடு வழங்குதல் பற்றி கிடைக்கின்ற பொது மக்கள் முறைபாடுகளை பொறுப்பேற்றல் மற்றும் தகுந்த விசாரணையினை நடாத்துதல். | 24 | 24 |

**அரசின் காணிகளில் குடியிருக்கும் பொது மக்களுக்காக உறுதிகளை வழங்கும் தேசிய விழாக்களை நடாத்துதல்**

(2018.09.21 **கல்கமுவ – பலுகந்தேவ ஜனாதிபதி வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தில்)**



**j. குழந்தை பருவத்தின் பராமரிப்பு மற்றும் மேம்பாடு பிரிவு.**

2018 ஆம் ஆண்டினுள் இப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட பணிகள் கீழ் காட்டப்பட்டுள்ளது.

1. மாவட்ட சிறுவர் மேம்பாட்டு குழு கூட்டம் நடாத்துதல்.

2.“அருண தகின ரடா” ஆரம்ப குழந்தைப் பருவ குழந்தைகளது ஓவியத்தின் அற்புதம் மாவட்ட மட்டத்தில் சித்திரங்களை தேர்ந்தெடுக்கும் நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துதல்.

3. ஆரம்ப குழந்தைப் பருவத்தை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தும் மத்திய நிலையத்தின் தரம் பற்றி பயிற்சியாளர்களை (ஆரம்ப நிலை குழந்தைகளது மேம்பாட்டு உத்தியோகத்தர்கள்) பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துதல்

4. ஆரம்ப குழந்தை பருவ மேம்பாட்டு உத்தியோகத்தர்களது, கொள்ளளவு மேம்பாட்டு திட்டத்தை (வடமேல் மாகாணம்) நடாத்துதல்.

இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக செலவிடப்பட்ட தொகை ரூ. 122,074 ஆகும்

### k. சிறுவர் உரிமைகள் பிரிவு.

2018 ஆம் ஆண்டினுள் இப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட சேவைகள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| நிகழ்ச்சித் திட்டம் | இலக்கு/பிரதி பலன் | கலந்துக் கொண்டவர்களின் எண்ணிக்கை | செலவிடப்பட்ட தொகை ரூபா |
|---|---|---|---|
| முன்னேற்ற ஆய்வு கூட்டம் 12 நடாத்துதல் | குருணாகல் மாவட்ட பி.செ. 30 இற்கு இணைக்கப்பட்ட நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களத்தில் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் | ஒரு கூட்டத்திற்கு 43 பேர் படி | 123,000 |
| உலக சிறுவர் தின திட்டம் | வெவ்கல பிரதேசத்தில் குழந்தைகள் மற்றும் பெற்றோர்கள் | 50 | 5,000 |
| சிறுவர் ஆரம்ப ஆராய்ச்சி நடவடிக்கை | வெவ்கல பிரதேசத்தில் குழந்தைகள் மற்றும் பெற்றோர்கள் | 20 குடும்பங்கள் மற்றும் 20 ஆராய்ச்சி குழுக்கள் | 20,000 |
| மாவட்ட சிறுவர் மன்ற அமர்வுகளை நடாத்துதல் | மாவட்ட சிறுவர் மன்றத்தில் சிறுவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் | மாவட்ட சிறுவர் மன்றத்தில் 90 சிறுவவர்கள் மற்றும் 43 உத்தியோகத்தர்கள் | 5,0000 |
| தேசிய சிறுவர் சபை அமர்விற்கு சிறுவர்களை அழைத்து செல்லல் | மாவட்ட சிறுவர் மன்றத்தில் சிறுவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் | மாவட்ட சிறுவர் மன்றத்தில் சிறுவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் 09 | 22,083 |
| பிள்ளைகளை வளர்ப்பதற்கான சிறந்த நடைமுறைகள் பற்றி பெற்றோர்களை அறிவுறுத்தல் | தம்பலியத்த வித்தியலயததின் மாணவர்களின் பெற்றோர்கள் | 100 | 5,000 |
| தொழில்சுநுட்பத்தை தவறாக பளன்படுத்துவதனால் பிள்ளைகளுக்கு ஏற்படுகின்ற தீங்கு பற்றி பிள்ளைகளை அறிவுத்தல் | சிறுவர் சமூக பிள்ளைகள் | 100 | 5,000 |
| சிறுவர்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கான உரியவர்களுக்கான கூட்டம் | மகளிர் மற்றும் சிறுவர் நடவடிக்கை அமைச்சின் குருணாகல் மாவட்டத்திற்கு இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் | 270 | 108,250 |
| மாவட்ட சிறுவர் மேம்பாட்டு குழு கூட்டம் 4 நடாத்துதல் | குழுவின் உறுப்பினர்கள் | ஒரு கூட்டத்திற்கு 200 பேர் படி | 80,000 |

### l. விசாரணை பிரிவு

குருணாகல் மாவட்ட செயலகத்தில் விசாரணை பிரிவு 2012.12.10 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன், 2018 ஆம் ஆண்டில் இப் பிரிவிற்கு 107 முறைபாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளது. இம் முறைபாடுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட 05 இற்காக ஆரம்ப விசாரணை நடைபெற்றதுடன், எஞ்சிய முறைபாடுகள் பிரதேச செயலகத்திற்கு அனுப்பப்பட்டு அறிக்கை பெற்றுக் கொண்டதன் பின்பு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

**m. ஆலோசனை பிரிவு.**

2018 ஆம் ஆண்டினுள் இந்த பிரிவினால் நிறைவேற்றப்பட்ட சேவைகள் கீழ் காட்டப்பட்டுள்ளது

- கலந்தாய்வுகளை நடாத்துதல்.
- மாவட்டத்தில் மன நோய் பிரச்சினைகளை உடைய மக்களுக்காக ஆலோசனை சேவை வழங்குதல்.
- மாதாந்த ஆய்வு கூட்டங்களை நடாத்துதல்.
- ஆலோசனை வழங்கும் உத்தியோகத்தர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்காக உளவியல் பயிற்சி திட்டங்களை நடாத்துதல்.
- குடும்ப ஆலோசனை சேவை சந்திப்புக்கள் நடாத்துதல்.
- போதைப் பொருள் நிவாரண நிகழ்ச்சித்திட்டத்திற்காக மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு தொழில்நுட்ப ஆலோசனை அறிவினை வழங்குவதன் மூலம் ஆலோசனை உத்தியோகத்தர்களை வலுவூட்டுதல்.
- குடும்பத்தில் உள்ளவர்களை போதைப் பொருளில் இருந்து விடுதலை செய்துக் கொள்வதற்காக கிராமீய மட்டத்தில் மற்றும் பிரதேச மட்டத்தில் மறுவாழ்வு முகாம்கள் மற்றும் பூஜைகள் நடைமுறைப்படுத்தல்.
- பாடசாலை போதைப் பொருள் தடுப்பு திட்டத்தினால் அடையாளம் காணப்பட்ட போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுக்காக போதைப் பொருள் பற்றி ஆலோசனை வழங்குதல்.
- பாதுகாப்பான இடம்பெயர்வு திட்டத்தின் கீழ் வெளிநாடுகளுக்கு சென்ற மக்களை வலுவூட்டுதல் மற்றும் பிள்ளைகளை பாதுகாப்பதற்காக உளவியல் சமூக வலயங்களை நிறுவுதல் மற்றும் தொண்டர் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி அளித்தல்.
- அவசர அனர்த்தத்தின் போது முதலுதவி ஆலோசனை மற்றும் முதலுதவி திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- ஆண் பெண் சமூகப்படி ஏற்படுகின்ற வன்முறைகளை குறைப்பதற்காக 03 இளைஞர் முகாம்களும் 300 ஆண் மக்களை அறிவுறுத்தல் மற்றும் 30 பிரதேச செயலகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 30 நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.
- அங்கவீன மக்களின் உளவியலினை மேம்படுத்துவதற்காக பலதரப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டது.

**n. விளையபட்டு பிரிவு.**

இந்தப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட பிரதான பணிகள் கீழ் காட்டப்பட்டுள்ளது.

| விடயம் | நிகழ்ச்சித் திட்டம் | செலவிடப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|
| விளாட்டு சக்தி | விளையாட்டு சக்தி ஓட்டப் போட்டி, பெசிபந்து, மிதி வண்டி, கால்பந்து, ஜிம்நாஸ்டிக், கபடி, வலைப்பந்து, ரகர், நீச்சல், மேசை பந்து, டைகொன்டோ, கைப்பந்து, பாரம் தூக்குதல், வூசூ மாவட்ட பயிற்சி ரிசவ் திட்டம் | 3,553,800 |
| விளையாட்டு மற்றும் உடல் நல ஊக்குவிப்பு வாரம் | 1.பிரதேச செயலகளினால் தேர்தெடுக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் உடற்பயிசி ஆலோசகர்களாக பயிற்சி அளிக்கும் திட்டம் | 49,870 |
| | 2. மாவட்டத்தில் 30 பிரதேச செயலயக பிரிவுகளில் உடற்பயிற்சி திட்டங்களை செயற்படுத்தல் | 1,430,867 |
| | 3. வடமேல் மாகாண அரச உத்தியாகத்தர்களின் உடல் நல திட்டம் | - |
| விளையாட்டு பயிற்சி முகாம் | விசேட வலைப்பந்து விளையாட்டு பயிற்சி முகாம்கள் | 49,550 |
| விளையாட்டு பயிற்சி நிலையங்கள் | விளையாட்டு பயிற்சி மத்திய நிலையம் விளையாட்டு பயிற்சி நடவடிக்கை ஆண்டு தோறும் தொடர்ந்த பயிற்சிகளை வழங்குதல் (வாரத்திற்கு 3 நாட்கள்) | - |
| அரச சேவை விளையாட்டு போட்டி | மாவட்டத்தில் அரச உத்தியோகத்தர்களின் ஆண்டு விளையாட்டு போட்டி | 353,368 |
| விளையாட்டு திறன்களை அடையாளம் காணுதல் | மாவட்டத்தில் பாடசாலைகளில் 7 ஆம் ஆண்டு மாணவர்களது விளையாட்டு திறமையினை அடையாளம் கண்டுக் கொள்ளும் பரிநீலனை திட்டம் மற்றும் பயிற்சித் திட்டம் (விளையாட்டு அமைச்சு மற்றும் கல்வி அமைச்சும் ஒருங்கிணைந்து) | - |
| கூட்டுத் தொகை | | 5,437,455 |

**2.31 நுகர்வோர் விவகாரங்கள்.**

2018 ஆம் ஆண்டினுள் இப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட சேவைகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| செய்யப்பட்ட சுற்றி வலைப்புக்களின் எண்ணிக்கை | | - 2138 |
| நடாத்தப்பட்ட அறிவுறுத்தும் திட்டங்களின் எண்ணிக்கை | | - 194 |
| பரிசீலனை செய்யப்பட்டு முடிவுறுத்தப்பட்ட முறைபாடுகள் | | - 33 |
| அறவிடப்பட்ட அபராதத் தொகை | ரூ. | - 7,773,000 |

**2.32 உற்பத்தித் திறன்.**

மாவட்டத்திலே அரச, தனியார் பாடசாலை, முன் பள்ளி, பொது சமூக அமைப்புகள் ஆகிய பீவுகளை உள்ளக்குமாறு உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கு உரிய 5 எஸ், தர சுற்றி, ஹரித உற்பத்தித் திறன் ஆகிய உற்பத்தித் திறன் கொள்கைகள் பற்றி விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துதல், ஆலோசனை பெற்றுக் கொள்ளுவதனை தொடர்வதன் மூலம் மாவட்டத்தில் உற்பத்தித் திறன் மேம்படுத்தல் இப் பிரிவின் முக்கிய நோக்காகும்.

| | **நிகழ்ச்சித்திட்டம்** | **செலவு ரூ.** |
|---|---|---|
| 1 | சிறு மற்றும் மத்திய அளவுடைய வர்த்தகர்னள் மற்றும் குருணாகல் மாவட்டத்தில் மற்றும் புத்தளம் மாவட்டத்தில் எல்லா உள்பத்தித் திறனுடைய அபிவிருத்தி உத்தியோகத்தர்களை விழிப்புணர்வூட்டும் திட்டம். | 87,150.00 |
| 2 | சிறு மற்றும் மத்தியளவிலான வர்த்தகர்களுக்கு உற்பத்தி திறன் கொள்கையினை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம். | 48,600.00 |
| | **மொத்த செலவு** | **135,750.00** |

**2.33 கணக்கு பிரிவு.**

கணக்குப் பிரிவில் பிரதான பணிப் பொறுப்பாவது மாவட்ட செயலகம் உட்பட எல்லா பிரதேச செயலகங்களின் நிதி நடவடிக்கை செயற்படுத்துதல், மேற்பார்வை மற்றும் அறிவித்தல்.

**1. <u>ஆண்டு மதிப்பீட்டு ஒதுக்கீடு ஒதுக்குதல்.</u>**

2018 ஆம் ஆண்டு வரவு செலவு மதிப்பீட்டில் 272 மாவட்ட செயலகம் குருணாகலுக்காக கீழ் காட்டப்பட்டுள்ளவாறு ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| செலவு தலைப்பு | : | 272, மாவட்ட செயலகம், குருணகால் |
| வேலைத்திட்டம் | : | 01, செயற்பாடுகள் நடவடிக்கை |
| செயற் திட்டம் | : | 01, சாதாரண நிருவாகம் மற்றும் நிர்வாக சேவை, மாவட்ட செயலகம், குருணாகல் |
| செயற் திட்டம் | : | 02 பிரதேச செயலகம |
| செயற் திட்டம் | : | 03 உலர் வலய பிரிவு |

01 ஆம் வேலைத்திட்டத்தில் செயற்திட்ட இலக்கம் 01 கீழ் மாவட்ட செயலகத்தில் நிர்வாக நடவடிக்கைக்காகவும் செயற்திட்டம் 02 இன் கீழ் குருணாகல் பிரிவில் பிரதேச செயலகங்கள் 20 இன் நிர்வாக நடவடிக்கைக்காகவும் செயற்திட்டம் 03 இன் கீழ் உலர் வலய பிரிவில் பிரதேச செயலகங்கள் 10 இன் நிர்வாக நடவடிக்கைக்காகவும் ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டுள்ளது.

மாவட்ட செயலகத்திற்காக 30 பிரதேச செயலகங்களுக்காகவும் மூலதன செலவிற்காக செயற்திட்ட இலக்கம் 01 கீழே ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டுள்ளது.

அரச உத்தியோகத்தர்களின் சம்பளக் கடன் முற்பணம் செலுத்துதல் மற்றும் அறவிடலுக்காக 27201 அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கின் கீழ் உரிய எல்லைகள் அனுமதிக்கப்பட்டுள்ளது.

## 2. ஏற்பாடுகளுக்கு எதிராக செலவு..

2018 ஆண்டிற்காக கிடைக்கப்பெற்ற செலவினை ஆய்வு செய்யும் போது, செலவு தலைப்பு 272 இல் 01 ஆம் வேலைத்திட்டத்தில் செயற்திட்டம் மூன்றிற்காக பொறுப்பேற்கப்பட்ட செலவு சுருக்கமாக கீழே காட்டப்பட்டுள்ளது.

செலவு தலைப்பு : 272 – குருணாகல் மாவட்ட செயலகம்
வேலைத் திட்டம் : 01 – செயற்பாடுகள் பிரிவு

**அட்டவணை 01**
**செயற்திட்ட மூன்றில் தேறிய ஏற்பாடுகளும் தேறிய செலவு**

| | செயற்திட்டம் | மொத்த தேறிய ஏற்பாடுகள் | மொத்த தேறிய செலவு | மீதி |
|---|---|---|---|---|
| | | **ரூ.** | **ரூ.** | **ரூ.** |
| **மீள்வரும் செலவுகள்** | 01. சாதாரண நிருவாகம் மற்றும் நிருவாக சேவை மா.செ.அ. | 83,457,400 | 82,021,400 | 1,436,000 |
| | 02. பிரதேச செயலகம் | 1,174,952,600 | 1,126,294,387 | 48,658,213 |
| | 03. உலர் வலய பிரிவு | 537,390,000 | 466,630,377 | 70,759,623 |
| | **மீள்வரும் கூட்டுத் தொகை** | **1,795,800,000** | **1,674,946,164** | **120,853,836** |
| | | | | |
| **மூலதன செலவு** | 01. சாதாரண நிருவாகம் மற்றும் நிருவாக சேவை மா.செ.அ. சாதாரண நிருவாகம் மற்றும் நிருவாக சேவை மா.செ.அ. | 69,000,000 | 60,296,194 | 8,703,806 |
| | 02. பிரதேச செயலகம் | 1,100,000 | 1,011,616 | 88,384 |
| | 03. உலர் வலய பிரிவு | 900,000 | 802,865 | 97,135 |
| | **மூலதன செலவு** | **71,000,000** | **62,110,675** | **8,889,325** |
| | | | | |
| **மொத்த கூட்டுத் தொகை** | **(மீள்வரும் மற்றும் மூலதன)** | **1,866,800,000** | **1,737,056,838** | **129,734,161** |

## 3. அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு - 27201

குருணாகல் மாவட்ட செயலகத்தில் 27201 அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு ''பீ'' கணக்கின் கீழ், 2018 ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் கிடைப்பனவும் செலுத்துகைகள் கீழ் குறிப்பிடப்பட்டவாறு தொகுக்கப்படலாம்.

| | **அதிகபட்ச செலவு வரம்பு** | **கிடைப்பனவின் குறைந்த பட்ச வரம்பு** | **பற்று மீதியின் உச்ச வரம்பு** |
|---|---|---|---|
| ஒதுக்கீட்டு கணக்குச் சட்டத்தினால் அதிகாரம் வழங்கப்பட்ட வரம்புகள். | 112,000,000.00 | 85,000,000.00 | 345,000,000.00 |
| ஆண்டினுள் பற்றுகள் மற்றும் வரவுகள் | 97,248,905.68 | 89,084,244.29 | 285,862,317.35 |
| அனுமதிக்கப்பட்ட வரம்புகளுக்கு உற்பட்டு செய்யப்பட்ட பற்று மற்றும் வரவு | 97,248,905.68 | 89,084,244.29 | 285,862,317.35 |

2018 ஆண்டினுள் அனுமதிக்கப்பட்ட வரம்புகள் ஏதும் மீறப்படவில்லை என்று மேலே காட்டப்பட்டுள்ள குறிப்பில் காட்டப்பட்டுள்ளது.

2018 ஆண்டினுள் இந்த முற்பணக் கணக்கு கணக்கின் கீழ் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு முற்பணம் வழங்குவதற்கு இயலுமாயின.

| முற்பண / கடன் வகைகள் | உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | செலுத்தப்பட்ட தொகை |
|---|---|---|
| விழா முற்பணம் | 2835 | 28,348,000 |
| விசேட முற்பணம் | 3100 | 12,400,000 |
| அனர்த்த கடன் | 376 | 56,400,000 |
| வேறு | 2 | 5,000 |
| **கூட்டுத் தொகை** | **6313** | **97,153,000** |

2018.12.31 திகதிக்கு இம் முற்பணக் கணக்கு நி.ச. 506(஌) பிரகாரம் தனி இருப்புடன் ஒப்பிடும் அறிவித்தலினை கணக்காய்வாளர் நாகத்திற்கு சமர்பிக்கப்பட்டுள்ளது.

**4. <u>பொது வைப்புக் கணக்கு</u>.**

2018 ஆண்டில் குருணாகல் மாவட்ட செயலகத்தில் பொது வைப்புக் கணக்கின் விபரம் கீழ் காட்டப்பட்டுள்ளது

| பொது வைப்புக் கணக்கின் இலக்கம் | **6000-0-0-1-68-0** | **6000-0-0-13-60-0** |
|---|---|---|
| 2018.01.01 திகதிக்கு மீதி | 6,343,315.39 | 119,354,684.34 |
| வருடத்தினுள் வைப்பு | 1,588,635.00 | 284,246,824.17 |
| குறை: வருடத்தினுள் செலுத்துகை | (6,221,113.39) | (378,875,004.96) |
| 2018.12.31 ஆந் திகதிக்கு மீதி | **1,710,837.00** | **24,726,503.55** |
| பொது வைப்புக் கணக்கின் இலக்கம் | **6000-0-0-16-42-0** | **6000-0-0-17-13-0** |
| 2018.01.01 ஆந் திகதிக்கு மீதி | 359,536,459.60 | 10,803,638.09 |
| வருடத்தினுள் வைப்பு | 196,980,322.94 | 141,791,023.81 |
| குறை: வருடத்தினுள் செலுத்துகை | (266,865,212.80) | (40,187,750.29) |
| 2018.12.31 ஆந் திகதிக்கு மீதி | **289,651,569.74** | **112,406,911.61** |
| பொது வைப்புக் கணக்கின் இலக்கம் | **6000-0-0-18-54-0** | **6000-0-0-2-91-0** |
| 2018.01.01 திகதிக்கு மீதி | 866,995.67 | 517,851.67 |
| வருடத்தினுள் வைப்பு | 16,350,709.95 | 300 |
| குறை: வருடத்தினுள் செலுத்துகை | (16,413,420.52) | (518,151.07) |
| 2018.12.31 ஆந் திகதிக்கு மீதி | **804,285.10** | **0.60** |

மேற்போந்த மீதிகள் திறைச்சேரி புத்தகங்களின் மீதியுடன் ஒப்பிடப்பட்டுள்ளது.

**5. வருமான கணக்கு.**

குருணாகல் மாவட்ட செயலாளர், எவ்வித வருமான தலைப்பில் கணக்கு கொடுக்கும் உத்தியோகத்தர் இல்லாத போதும், பலதரப்பட்ட வருமானம் கணக்கு கொடுக்கும் உத்தியோகத்தர்களுக்காக இரச வருமானம் ஒன்று சேர்த்துக் கொடுப்பதற்கு முகவர் நிறுவனமாக மாவட்ட செயலகமும் பிரதேச செயலகங்களும் நடவடிக்கை மேற்கொள்ளும்.

2018 ஆம் ஆண்டினுள், மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் ரூ. 476,112,989.27 தொகை வருமானமாக ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது. ஒன்று சேர்க்கப்பட்ட வருமானம் பற்றிய விபரம் உப அட்டவணை இலக்கம் 02 இல் காட்டப்பட்டுள்ளது. ஒன்று சேர்க்கப்பட்ட வருமானம் மாதாந்த கணக்கு சுருக்கம் மூலம் திறைச்சேரிக்கு அறிவிக்கப்பட்டதுடன், கடன் அறிவித்தல் மூலம் வருமானம் கணக்கு கொடுக்கும் உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்படும்.

## 6. <u>திறைச்சேரி முன்பணக் கணக்கு இலக்கம்</u> <u>7002/0/0/311/18.</u>

2018 ஆம் ஆண்டிற்காக குருணாகல் மாவட்ட செயலாளரின் திறைச்சேரி முன்பணக் கணக்கு மீதி கீழ் குறிப்பிடப்பட்டவாறாகும்.

| | **தொகை (ரூபா)** |
|---|---|
| 2018.01.01 திகதிக்கு முன்பணக் கணக்கு மீதி | (1,800) |
| வருடத்தினுள் திறைச்சேரியினால் பெற்ற முன்பணம் | 8,224,660,047.82 |
| கூட்டுக:திணைக்களத்தில் ஒன்று சேர்க்கப்பட்ட (முன்பண பற்று) | 771,710,796.00 |
| | 8,996,369,043.82 |
| கழிக்கவும்: நிதியினால் செலுத்துகை (முன்பண வரவு) | 8,996,369,043.82 |
| மீதித் தொகை | - |
| கழிக்கவும்: திறைச்சேரிக்கு பணம் வைப்புச் செய்யப்பட்ட தொகை | - |
| 2018.12.31 **திகதிக்கு மீதி** | - |

இந்த முன்பண மீதி திறைச்சேரி முன்பண மீதியுடன் ஒப்புதலானது.

## 7. <u>வரிசைகள் அமைச்சு மற்றும் திணைக்கள ஏற்பாடு..</u>

தமது செலவு தலைப்புகளுக்கு அமைய கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக 57 வரிசைகள் அமைச்சு மற்றும் திணைக்களங்களுக்கு கொடுப்பனவுகளுக்கு நேரடியாக ஈடுபடும். 2017 ஆம் ஆண்டு வரிசைகள் அமைச்சு மற்றும் திணைக்களங்களினால் குருணாகல் மாவட்ட செலாளருக்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் ரூ.9,377,621,104.40 ஆகும். அவ் ஒதுக்கீட்டினால் ஏற்கப்பட்ட செலவு ரூ. 6,854,544,966.37 ஆகும்.

*வருமான அறிக்கை – 2018 ஆம் ஆண்டு*

| தொடர் இலக்கம் | வருமான தலைப்பு | விபரம் | வருமானம் கணக்கு கொடுக்கும் உத்தியோகத்தர் | மொத்த வருமானம் |
|---|---|---|---|---|
| 1 | 10.02.04.01 | கலால் வரி – போதைப் பொருள் | கலால் வரி ஆணைளார் | - |
| 2 | 10.02.07.00 | முத்திரைக் கட்டணம் | தேசிய வருமான ஆணைளார் | 58,200.00 |
| 3 | 10.03.01.00 | சொகுசு வாகன வரி | மோட்டார் போக்குவரத்து ஆணைளார் | - |
| 4 | 10.03.02.00 | பரிமாற்ற வரி | ரெஜிஸ்ரார் ஜனரால் | - |
| 5 | 10.03.06.00 | சுற்றாடல் பாதுகாப்பு வரி | திறைச்சேரி செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் | - |
| 6 | 10.03.07.02 | ரெஜிஸ்ரார் ஜனரால் திணைக்களத்திற்கு உரிய பதிவு செய்வதற்கான கட்டணம் | ரெஜிஸ்ரார் ஜனரால் | 52,921,300.00 |
| 7 | 10.03.07.03 | தனியார் மரம் கொண்டு செல்லுதல் | வன பாதுகாப்பு | 2,324,804.25 |
| 8 | 10.03.07.04 | மோட்டார் வாகனம் விற்பனை மீதான வரி | மோட்டார் வாகனம் ஆணையாளர் | 12,000.00 |
| 9 | 10.03.07.05 | மக்கள் பாதுகாப்பு அமைச்சிற்கு உரிய உரிமப் பத்திரக் கட்டணம் | செயலாளர், மக்கள் பாதுகாப்பு மற்றும் நீதியும் சமாதனம் பற்றிய அமைச்சு | 1,358,450.00 |
